# அறிவுச்சுரங்கம்

## தேசிய வாசிப்புமாத சிறப்பிதழ்

## National Reading Month Journal

## 2022



## இதழ் 03

"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"

பொதுநூலகம் மாநகரசபை - மட்டக்களப்பு
Public Library Municipal Council - Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவுச் சுரங்கம்

## இதழ் ~ 3

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2022

இதழாசிரியர்

செல்வி.த.சிவராணி

வெளியீடு

பொது நூலகம்
மாநகர சபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சஞ்சிகை விபரம்

| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | அறிவுச் சுரங்கம் |
| இதழ் | மூன்றாவது |
| இதழாசிரியர் | செல்வி.த.சிவராணி<br>(நூலகர் பொது நூலகம்) |
| வெளியீடு | பொது நூலகம், மாநகரசபை,<br>மட்டக்களப்பு. |
| பதிப்புரிமை | வெளியீட்டாளருக்கே |
| ஆண்டு | 2022 |
| பக்கங்கள் | |

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மாநகர முதல்வரின் வாழ்த்துச்செய்தி

நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்ற தேசிய வாசிப்பு மாத செயற்பாட்டிற்கு அமைவாக மட்டக்களப்பு மாநகர சபையின் பொது நூலகங்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை மட்டக்களப்பு மாநகர இடப் பரப்பிலும் மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்து நடத்தி வருவதையிட்டு நானும் அவ் நிகழ்வுகளில் கலந்து கொண்டவன் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

இவ் ஆண்டு நடத்தப்படுகின்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் யாவும் மாநகர சபையின் நூலக நிலையியற் குழுவின் பங்களிப்புடன் நூலகரதும் நூலக பணிக் குழாத்தினதும் அர்ப்பணிப்பான செயற்பாட்டின் காரணமாக முறையான நிகழ்ச்சி நிரலுக்குள் வடிவமைக்கப்பட்டும் பல்வேறு நூலகம் சார்ந்த நிகழ்வுகளும் வாசிப்பு, கல்வி சார்ந்த நிகழ்வுகளும் உள்வாங்கப்பட்டு முறையான திட்டமிடலின் ஊடாக நடாத்தப்பட்டு இறுதி நிகழ்வும் நடைபெறுகின்றது.

கடந்த இரு வருடங்களாக நாட்டில் நிலவிய அசௌகரியங்களால் இவற்றை செயற்படுத்த முடியாத நிலை ஒன்று இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைகள் மாறி இவ்வாறான நிகழ்வுகளை முன்னெடுத்து செய்யக்கூடிய வாய்ப்பினை இறைவன் எமக்கு தந்திருக்கின்றார்.

இம் முறை இவ் நிகழ்வுகளுக்குள் கல்வி சார்ந்த பல அமைப்புகளும் உள்வாங்கப்பட்டிருப்பதும் ஒரு விசேட அம்சமாக இருக்கின்றது. அத்துடன் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சபையின் கௌரவ உறுப்பினர்களதும், மாநகர ஆணையாளர் உட்பட நிர்வாக தரப்பினரதும் ஒத்துழைப்பும் சிறப்பாக இருந்தது.

அந்த வகையில் கடந்த வருடங்களை விட இவ் வருடம் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளையும், போட்டிகளையும் மற்றும் இறுதி நிகழ்வினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாநகர சபையின் பிரதான நூலகர் ஏனைய நூலகர்களையும் மற்றும் நூலக உத்தியோகத்தர்களையும் ஒன்றிணைத்து சிறப்பாக நடத்தியமைக்காக அவர்கள் அனைவரையும் இத் தருணத்தில் பாராட்டுவதுடன், இதற்காக சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய நூலக நிலையியற் குழுவினருக்கும், சபையின் கௌரவ பிரதி முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் மற்றும் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட நிர்வாகத் தரப்பு உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநகர சபையின் கீழ் செயற்படுகின்ற பொது நூலகங்களும், வாசிப்பு நிலையங்களும் ஒன்றிணைந்து நடாத்துகின்ற தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வானது வாசகர்கள் உள்ளத்தை தொட்டுச் செல்லக்கூடிய ஓர் நிகழ்வாக அமையவும், இதன் மூலம் மேலும் பல வாசகர்களும் கல்விச் செல்வங்களும் நூலகங்களுடன் இணைய வேண்டும் என எதிர்பார்த்து வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



தியாகராஜா சரவணபவன்,

மாநகர முதல்வர்,

மாநகர சபை,

தி.சரவணபவன்
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர பிரதிமுதல்வரின் ஆசிச்செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபை பொது நூலகத்தினால் வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு"** என்பதற்கு அமைவாக ஒரு மனிதன் மீண்டும் மீண்டும் வாசிப்பதன் மூலம் அவன் ஒரு பூரணத்துவம் மிக்க மனிதனாக மாறுகின்றான் என்பதனைப் போன்றே கடுமையான உழைப்பே மக்களை வறுமையில் இருந்து மீட்கும் சமதர்ம சமுதாயம் மலர வன்முறை தேவையில்லை. கல்வியும் உழைப்பும் போதுமானது என்கிற பேரறிஞர் காமராஜரின் வரிகளை நினைத்துப் பார்க்கிறேன்.

மாணவர் மத்தியில் உள்ள கலை, கலாச்சாரம், இயல், இசை, நாடகம், பேச்சுவன்மை, மொழியாற்றல், விவாதத்திறன் போன்ற அனைத்து ஆளுமைகளையும் வெளிக்கொணர்வதாக இவ்வாசிப்பு மாத நிகழ்வுகள் நடந்தேறி வந்ததை கண்ணுற்று இருந்தேன். இதனை செம்மையாக நெறிப்படுத்திய நூலகர் அவரோடு இணைந்த அனைவருக்கும் அத்தோடு வாசகர் வட்டம் உள்ளிட்டோருக்கும் நடுவளம் செய்த பெரியோர்கள் அனைவரையும் இவ்வேளையிலே பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்

க.சத்தியசீலன்
பிரதி முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## முதலமைச்சின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

**"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"** என்னும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்ற தேசிய வாசிப்பு மாத பிரகடனத்திற்கு அமைவாக மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் செயற்படுகின்ற மட்டக்களப்பு பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வாசிப்பு மாத நிகழ்ச்சி நிரலுக்கமைய **"அறிவுச் சுரங்கம் - இதழ் 3"** சஞ்சிகை வெளியீடு செய்யப்படுவதையிட்டு மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

வாசகர்களின் தற்கால ரசனைக்கு ஏற்றதான பல்வேறு விடயங்களைச் தன்னகத்தே கொண்டதாக இவ்வருடம் இதழ் - 3 ஆக வெளிவருகின்ற சஞ்சிகையானது வாசகர்களின் அவாவினை பூர்த்தி செய்கின்ற ஓர் சஞ்சிகையாக அமையும் என நினைக்கின்றேன்.

எனவே இவ் **"அறிவுச் சுரங்கம் - இதழ் 3"** இனை வெளியிட அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நூலகர் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய நூலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் இச் சஞ்சிகையானது சிறப்புடன் வெளிவர ஆசி வழங்குகின்றேன்.

**திருமதி.கலாமதி பத்மராஜா**
**கௌரவ முதலமைச்சின் செயலாளர்**
**கிழக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## நூலகக்குழுத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொதுநூலகத்தினால் வெளியிடப்படும் "**அறிவுச்சுரங்கம் - இதழ்-3**" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தேசிய வாசிப்பு மாதம் 2022 ஐப்பசிமாத நிகழ்வினையொட்டி "**அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு**" என்னும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாநகரசபையின் கீழ் இயங்கும் பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வாசிப்பு மாத நிகழ்ச்சி நிரலுக்கமைய இச் சஞ்சிகை வெளியிட தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மக்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களை உள் வாங்கி இச்சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமை கொள்கிறேன். இச் சஞ்சிகையானது மட்டக்களப்பு நூலக வாசகர்களின் ஆக்கங்களை உள்வாங்கி வெளிவருவது சிறப்பம்சமாகும்.

இச்சஞ்சிகையினுடாக வாசகர்களுக்கும் நூலகத்திற்குமிடையிலான உறவு மேம்பட வேண்டும் என்பதுடன் வாசகர்களின் ஆக்கத்திறன் வாசிப்பு மீதான ஈடுபாடு என்பன பெரிதும் அபிவிருத்தியடையும் என எதிர் பார்க்கின்றேன்.

" **அறிவுச்சுரங்கம் இதழ் 3**" வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த நூலகர்,நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய வாசகர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இம்முயற்சியானது எதிர்வரும் காலங்களிலும் தொடர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.ச.கமலரூபன்**
**கௌரவ மாநகர சபை உறுப்பினர்**
**நூலகக்குழுத் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்து செய்தி

## வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் "வாசிப்பு மாதம் - 2022" சார்பாக வெளிடப்படும் அறிவுச்சுரங்கம் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்ற அதேவேளை சஞ்சிகை வெளியீட்டு குழுவினருக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் புலகாகிதம் அடைகின்றேன். தேசிய வாசிப்பு மாதம் - 2022 நிகழ்வினையொட்டி பலதரப்பட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு நூலக சிரமதானம், நடமாடும் சேவை, பாடசாலை மாணவ மாணவிகளுக்காக கருத்தரங்குகள், விசேட போட்டிகள் சிறுவர் பாடசாலைக்களுக்கு சிறுவர்படக்காட்சி காண்பித்தமை போன்ற விடயங்களும், அங்கத்தவர்களை அதிகரித்தமை, வாசிப்பினால் உயர்வடைந்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களை காட்சிப்படுத்தல் போன்ற நிகழ்வுகளையும் வெற்றிகரமாக திட்டமிட்டு நிறைவேற்றியிருந்தமை பாராட்டுக்குரிய விடயங்களாகப் பார்க்கின்றேன். அதேவேளை வாசிப்பு மாதத்தின் ஒரு அங்கமாக மட்டக்களப்பு பொது நூலகத்தினால் **"அறிவுச்சுரங்கம் இதழ் 3"** என்ற சஞ்சிகை வெளியிடப்படுவது மேற்படி நிகழ்வுகள் அனைத்திற்கும் முத்தாப்பாக அமைந்திருப்பதாகப் பார்க்கின்றேன்.

மட்டக்களப்பு நூலகர், வாசகர்கள், கல்விமான்கள், மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையும் நூலக உத்தியோகத்தர்களின் ஆக்கங்களையும் உள்வாங்கி இதுவரை காலமும் பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் உள்ளடக்கி இச் சஞ்சிகையினை அச்சுப்பிரதியாக கொண்டுவந்திருப்பதானது பாரட்டுக்குரியவிடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**அறிவுச்சுரங்கம்** என்னும் நூலின் பெயர் மாணவர்களையும் வாசகர்களை அறிவில் செதுக்கி பல்வடிவ பெயரில் அமையப்பெற்றிருப்பது சாலசிறந்தது. இச்சஞ்சிகையும் அதன் உள்ளடக்கங்களும் வாசகர்களையும் நூலகத்தினையும் ஒன்றிணைத்து சமூகத்தினிடையேயான நல்லுறவை சிறப்பாக மேலோங்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இவ் இதழின் மொட்டை மலராக்கும் முயற்சி எதிர்வரும் காலங்களிலும் தொடரவேண்டும் என வாழ்த்துவதோடு, எதிர் காலத்தில் மட்டக்களப்பு பொது நூலகமும் மேலும் வளர்ச்சி காண வேணடும் எனவும் இறைவனை மனதார வேண்டி மென் மேலும் நூலகப் பணி சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.நா.மணிவண்ணன்**
உள்ளூராட்சி
ஆணையாளர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தில் மட்டக்களப்பு நூலக சேவையினை எண்ணிப்பார்க்கையில் கிழக்கு மாகாணத்தில் முதற்தரமான பொது நூலகம் மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்றது என்பது பெருமையாக உள்ளது. இந்நூலகத்தின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி வந்து தற்போது நவீன வசதிகளுடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்டதும் தன்னியக்கமானதுமான வசதிகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

இதன் வரலாறு மிகப் பழைமையானதும், மட்டக்களப்பு பாரம்பரியங்களையும், கலை கலாசார விழுமியங்களையும் நீண்ட காலமாக முன்னெடுத்து வந்து இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்துடன் இணைந்துள்ளது. என்பதனை வெளிப்படையாக கூறலாம்.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் பயனை அனுபவித்து மேல் நிலை அடைந்தவர்கள் பலர். அவர்கள் இன்னும் இந்நூலகத்தின் பெருமையையும், தனிச் சிறப்பினையும் பேசுவார்கள்.

இன்று இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என குறைகூறப்படுகின்றது. அதனால் தான் இந்த வாசிப்பு மாதம் அவர்களை வாசிப்பின்பால் ஈர்க்க முற்படுகின்றது.

**“அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு”** என்னும் தொனிப்பொருளில் 2022ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் **“அறிவுச்சுரங்கம் இதழ்3”** சஞ்சிகை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இந்தப் பணியில் ஆக்கங்களைத் தந்து மற்றும் முன்னின்று பணியாற்றிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.

உங்கள் பணி தொடரட்டும். வாசிப்பதனூடாக வாழ்வை வளப்படுத்துவோம்.

**நா.மதிவண்ணன் SLAS-1**
மாநகர ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர பிரதிஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

**"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"** என்னும் தொனிப்பொருளில் 2022ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் **"அறிவுச்சுரங்கம் இதழ் 3"** என்னும் தலைப்பில் கட்டுரைகள், கவிதைகள், வாசிப்பு சார்ந்த கதைகள் எனப் பல்வேறு ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

ஏனைய விலங்குகளில் இருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் பண்புகளில் பிரதான ஒன்றாக பகுத்தறிவு காணப்படுகின்றது. இத்தகைய பகுத்தறிவின் பூரண வளர்ச்சிக்கு வாசிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

இவ்வாறான வாசிப்பினை ஊக்குவிப்பதில் நூலகங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும் அண்மைக் காலங்களில் வாசகர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனை தவிர்க்கும் நோக்கில் இவ்வருட தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப் பொருளாக **"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"** என்பது காணப்படுகின்றது. இதற்கு செயல் வடிவம் கொடுப்பது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அதன் அடிப்படையில் இவ்வருட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை சிறப்பாக நடத்திக் கொண்டிருப்பதுடன் அதன் ஓர் அங்கமாக **அறிவுச்சுரங்கம் இதழ் 3"** என்னும் இச்சஞ்சிகையினை வெளியிடும் மட்டக்களப்பு பொதுநூலக நூலகர், நூலக உத்தியோகத்தர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவ்சஞ்சிகைக்கான ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து தங்களது முயற்சி தொடர்ந்தும் வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உ.சிவராசா
பிரதி ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## வாசகர்வட்ட தலைவரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை(2022) முன்னிட்டு மட்டக்களப்பு நூலகத்தினால் வெளியிடப்படும் "அறிவுச்சுரங்கம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமகிழ்கிறேன்.

"நல்லதோர் மனிதனுக்கு நல்லதோர் புத்தகம் வாழ்நாள் முழுவதற்குமான நல்லதோர் பொக்கிஷமாகும்" என்றான் ஓர் பேரறிஞன். புத்தக வாசிப்பின் மூலம் வாழ்வில் சிகரத்தை தொட்ட எத்தனையோ சாதனையாளர்களை நாம் வரலாறு முழுவதும் சந்திக்கின்றோம். அவர்களை பட்டியலிட்டால் இந்த மலரே போதாது.

அனுபவங்களே மனிதனைப் பட்டை தீட்டுகின்றன. ஒரு மனிதனால் வாழ்க்கை அனுபவங்கள் அத்தனையையும் தன் வாழ்நாளில் பெறமுடியாது. அவ்வாறான அனுபவங்களைப் பதிவு செய்த பேரறிஞர்களின் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் மனிதன் முழுமையடைகிறான். எனவே வாசிப்பை நேசிப்போம், புத்தகங்களின் உயிர்மூச்சை சுவாசிப்போம், அதனால் வாழ்வில் வைரங்களாய்ப் பிரகாசிப்போம்.

சோ.அருளானந்தம்
தலைவர்
வாசகர்வட்டம்
மட்டக்களப்பு நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## நூலாசிரியரின் இதயத்திலிருந்து

பலநாட் போரின் விளைவாக ஒரு கீதை பிறந்தது. அதுபோல் 30நாள் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகளின் பயனாக இச்சஞ்சிகை மலர்கிறது.

எழுத்து ஒரு கலையெனில் வாசிப்பு அதன் மறுகலை எழுதத் தூண்டும் எண்ணங்கள் போலவே வாசிக்கத் தூண்டும் எண்ணங்களும் எழுத்தும் வாசிப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

நான் எழுத்தாளனல்ல, தீவிர வாசகி

வகைவகையாகவும் தொகை தொகையாகவும் நூலகத்தில் தேங்கிக் கிடக்கும் நூல்களை வாசிக்கும் வாசகர்கள் அருகிவரும் சவாலானதொரு காலகட்டத்தில் நூலகராக எனது பணியை மேலெடுத்துச் செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை.

இந்த எண்ணக்கருவில் உருவான "தேசிய வாசிப்பு மாதம்" என்கிற திட்டத்தின்கீழ் வாசிப்பை ஊக்குவித்தல் என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

பிற்பட்ட பாடசாலைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நூல்களை முதலில் அறிமுகம் செய்ய வேண்டும் என்கிற தொனிபலராலும் முன்வைக்கப்பட்டது. எனவே முப்பது நாட்களுக்கான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்குவைத்தேன்.

வாசிப்பென்பது இலத்திரனியல் மயமாகிக் கொண்டிருக்கும் ஒருகாலகட்டத்தில் நூல் வாசிப்பையும் பேணவேண்டிய தொரு நெருக்கடி நிலை. காட்சி ஊடகங்கள், வானலை ஊடகங்கள் அறிமுகமாகுமுன் மக்கள் மத்தியில் வாசிப்பே பிரதான பொழுது போக்காகவும், அறிவின் வழி மனிதனை நகர்த்திச் செல்லும் பிரதான காரணியாகவும் திகழ்ந்தது. அறிவைப் பெறவும் பகிரவும் இதுவழிகோலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரீட்சைப் பெறுபேறுகளை மையப்படுத்திய (Result Oriented) கல்வி முறை மாணவர் மத்தியில் வேரூன்றிப் போன ஒரு காலகட்டத்தில் நூல்வழி அறிவைவிருத்தி செய்யும் பண்புகளும் அற்றுப் போனது சோகம் தான். எனவே வாசிப்புப் பழக்கத்தை மாணவர் பக்கம் நகர்த்த வேண்டிய தேவையை ஒரு நூலகரென்கிற வகையில் என்னால் உணரமுடிகிறது.

ஏனெனில் எதிர்காலம் அவர்களது நல்ல படைப்பாளியாக வேண்டுமெனில் ஒருவர் முதலில் நல்ல வாசகனாக வேண்டும். மரபுவழி இலக்கியங்களிலிருந்து பல "இசங்களுக்கு" இலக்கியம் கால ஓட்டத்தில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது தேவையிலுள்ளது. என்பதை இளஞ்சந்ததி புரிந்து கொள்ளுமா?

நமக்குள் வாசிப்பு ஏற்படுத்தும் சீரிய செவ்வழிச் சிந்தனைப் பரிணாமங்களை நாம் உணர வேண்டும். வாசிப்பை ஓர கோட்பாட்டுச் சிந்தனையாக்கிச் செயற்பட வைக்க வேண்டியதை என் தலையாய கடமையாக உணர்கிறேன்.

மாற்றுச்சிந்தனைக்கு நாம் தயாரா...? எனில் வாசிப்பை நேசிப்போம்.

**த.சிவராணி**
**நூலகர்**
**பொது நூலகம்**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்

விடயம் பக்க எண்


- எதுவும் கடந்து போகும் …………………………………………………. 1
- கூ.மூ……………………………………………………………… 2-4
- புத்தகம் படிப்போம் (சிறுவர் பாடல்) ………………………………… 5
- புத்தகப் பூச்சி ………………………………………………… 6
- போதைப் பொருள் பாவனையற்ற வாழ்க்கை….. ………………….. 7-8
- பாரதியார் கவிதைகளில் சமூகநீதி(கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்) … 9-10
- பாரதியார் கவிதைகளில் சமூகநீதி(கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம்) … 11-12
- பாரதியார் கவிதைகளில் சமூகநீதி(கட்டுரைப் போட்டியில் மூன்றாமிடம்) … 13-14
- வாசிப்பால் வாழ்வை வளமாக்கு (கவிதை போட்டியில் முதலாமிடம்) ……. 15
- வாசிப்பால் வாழ்வை வளமாக்கு (கவிதை போட்டியில் இரண்டாமிடம்) … 16
- வித்தகனாகிட புத்தகம் நாடு (கவிதை போட்டியில் மூன்றாமிடம்) ……… 17
- வாசிப்பு மாதம் ……………………………………………………… 18
- வாசிப்பும் நூலகத்தின் வகிபங்கும் …………………………………… 19-24
- மட்டக்களப்பு பற்றிய தகவல்கள் ……………………………………… 25-26
- புகைத்தலைத் தவிர்ப்போம் ……………………………………………… 27
- வாசிப்புத் திறன் ………………………………………………………… 28-30
- குழந்தைகளுக்கு உற்சாக டானிக்கை கொடுத்திட்டே இருங்க ……………… 31-32
- வாசிப்பை ஊக்குவிப்போம் ……………………………………………….. 33-34
- கனவு நனவானது ………………………………………………… 35
- வாசித்திடு நாளும் ……………………………………………… 36
- தளர்ந்த மனதுக்கு தங்க பாய்ப்பம் …………………………………… 37
- பாரம்பரிய சமையல் குறிப்பு ……………………………………… 34
- எங்கள் நூலகம் ……………………………………………………… 39
- சமாதானம் ………………………………………………….. 40
- தேசிய வாசிப்பு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்………….. 41-62




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எதுவும் கடந்துபோகும்

சிவநேசன் அலுவலகம் முடிந்தபின் வீட்டுக்குச் செல்லும் வழியில் பொது நூலகம் சென்று பத்திரிகைகள் வாசித்து விட்டு வீட்டுக்குச் செல்வதுதான் வழக்கம். முன்பெல்லாம் வேலைக்கு மோட்டார் சைக்கிளில் தான் செல்வார். பெற்றோல் தட்டுப்பாட்டுக் காலத்தில் மிதிவண்டியில் அலுவலகம் செல்ல ஆரம்பித்தவர் நிலைமை ஓரளவு சீரமைந்த பின்னரும் மிதிவண்டியில் தான் செல்லத் தொடங்கினார். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று: சைக்கிள் ஓடத்தொடங்கிய பின்னர் கை,கால் வலிகள் எல்லாம் மெல்லக் குறையத் தொடங்கியிருந்தன. இரண்டு : மூத்தமகனும் உயர்தரப் பரீட்சையில் சிறப்பாக சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்ல தகுதிபெற்றிருந்தான். அவனுக்கென்று ஒரு மோட்டார் சைக்கிள் வாங்க சிவநேசனால் இயலவில்லை. எனவே தனது மோட்டார் சைக்கிளை அவனது பாவிப்பிற்கு கொடுத்திருந்தார். இளந்தாரிப்பிள்ளையை தாங்கிப்பிடிக்கத்தானே வேண்டும். ஏனெனில் அவனின் வயதைக் கடந்து தானே தானும் வந்திருந்தார். தனக்கிருந்த மோட்டார் சைக்கிள் ஆசை மகனுக்கும் இருக்கும்தானே! என்று அவர் உணர்ந்திருந்தார். அத்துடன் QR பெற்றோல் இருவரின் பாவனைக்கும் போதாது என்பதும் அவருக்கும் புரியும்.

நூலகத்தில் பத்திரிகைகளை வாசித்த பின் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார். போகும் வழியில் வங்கி ஏ.ரி.ம் இயந்திரத்தில் அட்டையைப் போட்டு சம்பளப்பணத்தை எடுத்தார். இம்முறை சம்பளத்தில் பத்தாயிரம் ரூபா குறைவாக இருந்தது. ஏன்.....? என்று சிந்தித்தவாறு சைக்கிளை மிதித்தார். நாளைக்குத்தான் “பேசீற்றை” பார்க்க வேண்டும். என்று எண்ணிக்கொண்டு வீடு சென்றார்.

“அப்பா வாறாரே....!” அப்பா வாறாரே! என்று இரண்டு சின்னப்பிள்ளைகளும் ஓடிவந்து அவரின் கால்களை கட்டிப்பிடித்தனர். அவரின் இரண்டாவது பிள்ளைகள்மகள்கள் இரட்டைப்பிள்ளைகள். சைக்கிளை ஸ்ராண்ட்டில் போட்டு விட்டு அலுவலகப்பையைத் திறந்து கிழங்குப் பொரியல் பார்சலை எடுத்து “இத அம்மாட்டக் கொடுத்து இரண்டுபேரும் சாப்பிடுங்க” என்று ஒப்படைத்தார்.

குளித்து சாப்பிட்டு விட்டு அலுவலக நிதிஉதவியாளருடன் தொலைபேசியில் கதைத்தார். சம்பளம் ஏன் குறைந்திருந்தது. விளக்கம் கிடைத்தது.

சிவநேசனுக்கு தற்போது ஐம்பத்தொன்பது வயது. அறுபத்தைந்து வயதுவரை கழிக்ககூடியவாறு பத்துமாதச்சம்பளம் கடன் பெற்றிருந்தார். மாதம் ஆறாயிரம் ரூபா கழித்தார்கள். திடிரென ஓய்வு பெறும் வயதை அறுபதாக்கியமையால் இனி ஒவ்வொரு மாதமும் பத்தாயிரம் ரூபா மேலதிகமாக கழிப்பார்கள்.

மனைவியும் பிள்ளைகளும் சாப்பாட்டு மேசையில் இருந்தார்கள். சிவநேசனின் முகம் கவலையில் இருண்டு கிடந்தது. “இப்பிள்ளைகளையும் குடும்பத்தையும் எப்படிக் கொண்டு இழுக்கப்போகிறேன்?” என்று கலங்கினார்.

அவரின் மூத்த மகன் அவரிடம் சொன்னான் “அப்போய் யோசிக்க வேண்டாம்.... எனக்கு நல்ல றிசல்ட் யூனிவசிற்றிற்குப் போய்த்தான் பட்டம் பெற வேண்டும். என்றில்லை ஒன்லைனில் இரண்டு மூன்று பேங்கிற்கு அப்ளை பண்ணியிருந்தான். ஒரு பேங்கில் பயிற்சி அலுவலகராக கூப்பிட்டிருக்காங்க.. இரண்டு வருடம் மாதம் முப்பதாயிரம் சம்பளம். அதற்குப்பிறகு பேமனன்ட் ஜொப். எல்லாம் சேர்த்து ஒரு லட்சம் வரும்... நான் சேரப்போறன். இதுவரையும் என்னைக் காப்பாற்றினீங்க, வளத்தீங்க. இனிநான் உங்களையும், அம்மாவையும், தங்கச்சிமாரையும் வளப்பன். “அப்பா எதுவும் கடந்து போகும்...”

சிவநேசனும் மனைவியும் கண்கலங்கினார்கள். தங்கைமாருக்கு எதுவும் விளங்கவில்லை: ஆனால் சிரித்தார்கள்.

**ஆழியோன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கூ.மு

என்னைக் புதைக்க கூ.மு

எடுக்கின்ற ஒவ்வொரு கணமும்

நான்

மூன்றாம் நாள் எழுந்து விடுகிறேன்.

என்னைநீ சரியாகப் படிக்கவில்லை

என் ஒற்றையில் தொங்கக்கூட
லயக்கற்ற ஈனம்

நான் இன்று துயில் எழவில்லை

என் தலைமாட்டில்

புதைந்திருக்கும்

புல்லாங்குழலை ஊதலாம்

நான் யார்?

நஞ்சூட்டப்பட்ட வாளவீமன்
கதைக்காரனா?

கலகக்காரனா?

உன்னால் எனக்கு
தேதியிடமுடியாது

இன்னுமொரு பொழுது எழ
விரும்புகிறேன்

நான் "தொட்டால் சுருங்கி" யென
நினைத்து விட்டாய்

மூன்று பிடி மண்ணிட்டு

என் சரித்திரத்தை
முடிக்கலாமென....

கனவுகள் யாருக்கு

ஜெயித்திருக்கு ??

நான் உன்னைக்காண
விரும்புகிறேன்

★ ★ ★ ★

மஞ்சள் கரு எப்போது நாறியது?
வெள்ளைக்கரு எப்போது

காலாவதியாகியது? என்மீது
விழுகின்ற துர்நாற்றத்தை என்னால்
சகிக்க

முடியவில்லை. கூ. மு தனக்காக
இருக்கைக்கு மஞ்சள் கருவையும்

வெள்ளைக்கருவையும் எப்படிக்
கலக்கினான். அடை வைக்கும்
போது அது

பொரிக்கவில்லையே.. ஆனால்
நாற்றம் கொள்ளவில்லை.சஜ
சிறகுக்குள்

அடைக்கோழி
பொத்திப்பொத்தித்தான்
வச்சிருந்தது. நானும் ஒரு தடைவ

தோமஜ் அல்வா எடிசன் போல்

அடைகாத்திருக்கன்.
அப்போதிருந்தே மஞ்சள் கரு
என்னோடு நல்லமில்லை.

இப்போ வெள்ளைக் கருவும்
அப்படித்தான். சன்மாற்றத்தில்
எல்லாம்

தொவையுமென்றால் அந்த
நாசமறுப்பு அப்படித்தான் கிடக்கு

கூ. மு வை.. யதியின்
மௌனம்தான் வெற்றியாக்குகிறது.
குப்பையில்

கிடந்தவளை உச்சாணியில்
சொருகியது மாபெரும் தவறு.
தவறல்ல

மடத்தனம் நான் இன்று
யோசிப்பதில் எதுவுமில்லை.
அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலடித்தடங்கள் பெருக்கின்றன.
இது எப்படிச்சாத்தியம்

சாத்தியங்கள் பல அவளிடம்
இப்போ பலமுகமும் பலதொப்பியும்

முள்ளன. பயம் கொள்வதற்கு
அவளிடம் ஓர துகள் மண்கூட

இருக்கவில்லை. "கூ. மு"
வைத்தான்
ஆதரிக்கத்தொடங்குகிறாள். பக்கம்

பக்கமாக என்னைத் திட்டத்
தொடங்கினாள். "கூ. மு" க்கு
இதற்குள்

காலோட்ட என்ன தேவை? "டி"
க்கு அவள்தான் சிறக்கு
வைத்தவள் "டி"

தானாக பறவை பழகியதை "கூ.
மு" அறியார். எல்லாவற்றையும்

துண்டித்தாள். கேப்பா புத்திக்காரி
வேறு என்ன வென்று சொல்வது?
எனக்கு

நீ எந்தப்பிரயோசனமுமில்லை.
எந்தக் கதவுகளையும்
திறக்கமாட்டேன் என

அவள் அடைத்தபோது "கூ. மு"
நாறத் தொடங்கியது. என்னில்
படர்ந்திருந்த

நாற்றத்தை நான் ஏழுகடலில்
மூழ்கியும் அகலவில்லை.
மாருதப்புரவிக்கு

எப்படி குதிரை முகம் இல்லாமல்
போனது? அவளுக்கு ஒரு மண்ணும்

புரியவில்லை என்னை
அகலச்சொன்னாள் போடி
போக்கற்றவளே

கேப்பா புத்தி எப்படித்தோன்றுகிறது
தாழமுக்கத்திலிருந்து எப்படிச்

சூறாவெளியாக மாறுகிறது.
யோசிக்கத்தொடங்கினேன். நாட்கள்
கழிகின்றன

அவள் பிடிபடவில்லை

சாத்தியங்கள் பல அவளிடம்
இப்போ பலமுகங்களும்,
பலதொப்பிகளும்

முள்ளன. பயம் கொள்வதற்கு
அவளிடம் ஒரு துகள் மண்கூட

இருக்கவில்லை. "கூ. மு"
வைத்தான்
ஆதரிக்கத்தொடங்குகிறாள். பக்கம்

பக்கமாக என்னைத்
திட்டத்தொடங்கினாள். "கூ. மு"
க்கு இதற்குள்

காலோட்ட என்ன தேவை? "டி"க்கு
அவள்தான் சிறக்கு வைத்தாள்.
"டி"

தானாக பறவை பழகியதை "கூ.
மு" அறியார். எல்லாவற்றையும்

துணடித்தாள். கேப்பா புத்திக்காரி
வேறு என்ன வென்று சொல்வது?
எனக்கு

நீ எந்தப்பிரயோசனமுமில்லை.
எந்தக் கதவுகளையும் திறக்க
மாட்டேன் என

அவள் அடைத்த போது "கூ. மு"
நாறத் தொடங்கினான். என்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படர்ந்திருந்த நாற்றத்தை நான்
ஏழுகடலில் மூழ்கியும்
அகலவில்லை.

மாருதப்புரவிக்கு எப்படி குதிரை
முகம் இல்லாமல் போனது?
அவளுக்கு

ஒரு மண்ணும் புரியவில்லை.
என்னை அகலச்சொன்னாள் போடி

போக்கற்றவளே

நான் எதையும் சபிக்கவில்லை

நான்

எழுந்திருக்கிறேன்

மஞ்சள் கரு எனக்கொரு
பொருட்டல்ல

வெள்ளைக்கரு

எனக்கொரு செய்தியுமில்லை

கூ. மு வைத் தான்

கூறாக்க வேண்டும்

எல்லா நசநசப்பிலும்

ஒற்றை வார்த்தைதான்

மிஞ்சியிருக்கு......

**த.மலர்ச்செல்வன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புத்தகம் படிப்போம் (சிறுவர் பாடல்)

அறிவுப் புதையல் தனது வயிற்றில்
அடக்கி வைத்திடுமே
அறிந்து நாமும் அதனைப் படித்தால்
அள்ளித் தந்திடுமே
அறியாத் தகவல் பலவும் சொல்லி
ஆனந்தப் படுத்திடுமே
அறியாமை என்னும் இருளைப் போக்கி
அறிஞர் ஆக்கிடுமே

புத்தம் புதிய அனுபவம் தந்து
புதுமைகள் படைத்திடுமே
பத்திரமாய் நம் மனதை நாளும்
பக்குவப் படுத்திடுமே
சித்திரமாய் சில நினைவுகள் எழுதி
சந்தோஷம் தந்திடுமே
முத்தெனவே பல அறிவுரை சொல்லி
முன்னேறச் செய்திடுமே

புத்தகம் போலே நண்பர்கள் இல்லை
புரிந்தே நாம் படிப்போம்
உத்தமராய் நமை வாழ்ந்திட வைக்கும்
உவந்தே நாம் படிப்போம்
நித்தமும் எம்முடன் துணையாக வரும்
நாளு மதைப் படிப்போம்
சத்தியமாய் முழு மனிதன் ஆக்கும்
சீராய் அதைப் படிப்போம்

**சோ.அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புத்தகப் பூச்சி

புத்தகங்களைப் புரட்டினேன்
பக்கமெல்லாம் பூச்சிமயம்
பூச்சிகள் எப்போது
தமிழ் படித்தன....? தெரியாது
பூச்சிகள் அரித்த பக்கங்களாய்
கரைகிறது மனது

**அ.ச.பாய்வா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப் பொருள் பாவனையற்ற வாழ்க்கை முறைமையை கட்டியெழுப்புவதில் இளம் சமுதாயத்தின் பங்களிப்பு

மாறிவரும் உலகில் பலவிதமான பிரச்சினைகள் தொழிநுட்ப ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் தீர்த்துக் கொண்டு வந்தாலும், முன்னைய காலத்தை விட தற்போது வளர்ச்சியடைந்து வரும் போதையாகிய ஒன்றும் சமுதாயத்திற்கு ஒரு பிரச்சினையாகவே இருந்து கொண்டிருக்கும். இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று இந்த போதைப் பொருள் பாவனை. நவீன உலகில் ஏதோ ஒருவகையில் எல்லோரும் போதைக்கு அடிமையாகியே உள்ளனர். ஆனால் இதை போதையென்றே கூறிவிடமுடியாது. இது சிறு அடிமைத் தனத்தைக் குறிக்கிறது எனலாம்.

உலகம் முழுவதும் 2.30கோடி மக்கள் பல்வேறு வகையில் பல்வேறு விதமான போதைப் பொருட்களைப் பயன்படுத்தி வருவதாக ஐக்கிய நாடுகளின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.. போதைப்பொருட்கள் போதையை ஏற்றிக் கொள்ளவும் பொழுது போக்கிற்காகவும் உட்கொள்ளப்படுகின்றன. உலகில் போதைப் பொருட்கள் போதையைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது அல்ல. மருத்துவமனையில் பயன்படுத்திய சில மருந்து வகைகளை தவறான முறையில் பயன்படுத்தியதால் அவை நாளடைவில் போதைப் பொருட்களாக மாறியுள்ளது. போதைப் பொருட்களை பயன்படுத்துவோர் அவற்றிற்கு அடிமையாகி அவை இன்றி வாழமுடியாத நிலைமையும் உருவாகிறது.

இவ்வாறான போதைப் பொருட்களுக்கு உதாரணமாக மதுபான வகை, புகையிலை, கஞ்சா, அபின், கெராயின், பான்மசாலா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்போதைகள் வாழ்வின் பாதையையே மாற்றி விடுகின்றது. நகர்ப்புறங்களில் மதுபானம் ஆண்களிடம் மட்டுமல்லாமல் பெண்களிடையேயும் பரவுகிறது. மாணவர்களிடையேயும் பரவியுள்ளது. இவ்போதைப் பொருட்கள் எதிர்கால சந்ததியினரையும் பாதிப்புள்ளாக்கிவிடும். இவ்போதைப் பொருட்களிலிருந்து எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததியினரையும் பாதுகாப்பது எமது கடமையாகும்.

உலகத்தில் தற்போது போதைப் பொருள் பயன்பாடு மிகவும் கடுமையான சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது. நாட்டில் நோய்களும், தற்கொலைகளும், சிறுவர் துஸ்பிரயோகம், பெண்கள் துஸ்பிரயோகம் என்பன போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால் அதிகரித்துள்ளது. போதைப் பாவனையாளர்கள் அதிகமாக மஞ்சட்காமாலை, வலிப்பு, புற்று நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். பல்வேறு விபத்துக்களுக்கும் இவ்போதைப் பொருளும் காரணமாய் உள்ளது. இதயநோய், பால்வினை நோய் போன்றவற்றிற்கும் போதை வஸ்துக்களே பிரதான மூலகாரணமாக அமைகிறது.

போதைப் பொருளைப் பயன்படுத்துவோர் அவற்றிற்கு அடிமையாகி அவை கிடைக்காத சந்தர்ப்பத்தில் அவை அவர்களைத் தற்கொலைக்குத் தூண்டிவருகிறது. இதனால் சமுதாயத்தில் தற்கொலைகளும் அதிகரித்துள்ளன. பெண்கள் துஸ்பிரயோகம், சிறுவர் துஸ்பிரயோகம் அதிகரித்ததற்கு இந்த போதைப்பொருள் பாவனையும் ஒரு கருத்தாவாகாத்தான் உள்ளது. இதனால் சமுதாயத்தில் உள்ள பெண்கள் சிறுவர்களின் குறிப்பாகப் பெண்களுக்கு பாதுகாப்பு குறைவடைகிறது. இது அவர்களுக்கு சமுதாயத்தில் வேறு விதமான பிரச்சினையை உருவாக்கி அவர்களின் வாழ்க்கையை சீர்குலைத்து விடுகிறது.

உதாரணமாக வறுமையில் உள்ள குடும்பம் : அக்குடும்பம் தன் குடும்பத்தலைவரை நம்பியுள்ளது. குடும்பத்தலைவர் தன் வரவுகளையெல்லாம் போதையைப் பெற்றுக்கொள்வதற்கு செலவழித்தால் அக்குடும்பத்தின் நிலை என்ன? அவரை நம்பியிருப்பவரின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகிவிடும் அல்லவா பொழுதுபோக்காகவும் சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்திற்காகவும் பயன்படுத்தும் போதைப்பொருள் உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதோடு சமூகத்தில் பல சீர்கேடுகளையும் உருவாக்கி விடுகின்றது.

போதைப்பொருள் சமுதாயத்தினுள் எவ்வாறு ஊடுருவுகிறது என ஆராய்வோம். இன்றைய சமுதாயம் பரவலாகப் போதை பாவனைக்கு உட்பட்டு வருகின்றது. விளையாட்டாக ஆரம்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பழக்கம் நாளடைவில் இளம் சமுதாயத்தினுள் முழுமையாக உட்புகுந்து உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. இது தமது எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததியினரையும் பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றது.

இளம் தலைமுறையாகக் கருதப்படுகின்ற மாணவர்கள் போதைப் பாவனைக்கு அடிமையாக மாறி வருவது தற்போது பேச்சுப் பொருளாக மாறியுள்ளது. மாணவர்கள் போதை வஸ்துக்களுடன் கைது செய்யப்படுவதும் சட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு மாட்டிக்கொள்வதும் பத்திரிகைகளில் அன்றாட செய்திகளாக மாறி விட்டன. இது சமுதாயத்திற்கு நாளை சேவையாற்ற வேண்டிய தலைவர்களை மாற்றிவிடுகிறது.

மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு எவ்வாறு அடிமையாகின்றனர். என உற்று நோக்கலாம் மாணவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகுவதற்கு பிரதான காரணமாக அமைவது அவர்களின் வீட்டுச்சூழல். வீட்டில் வசிக்கும் யாராயினும் ஒருநபர் மதுபானம், புகையிலை போன்றவற்றைப் பயன்படுத்துவோராக இருந்தால் அவ்வீட்டில் வசிக்கும் சிறுவர்கள் அதனைப் பயன்படுத்த தூண்டப்படுகின்றனர். கெட்ட நண்பர்களின் தூண்டுதலாலும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். சிலர் சினிமா திரைப்படங்களில் வரும் குடிபோதைக் காட்சிகளை நாகரீகமாகக் கருதி போதைக்கு அடிமையாகின்றனர். போதைப் பொருள் கடத்தல் என்பது சட்டவிரோதமான செயல் ஆகும். போதைப் பொருளை விற்பனை செய்பவர்கள் சட்டத்திற்கு விரோதமாக செயற்பட்டுப் போதைப் பொருட்களைக் கடத்தி விநியோகித்து சமுதாயத்தினுள் பரப்பி விடுகின்றனர். இவர்கள் பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்றனர். இது பாராட்டத்தக்க விடயமாகும். இவ்வாறு இளம் சமுதாயத்தினுள்ளும் போதைப் பொருள் உள்நுழைகிறது.

இவ்வாறு சமூகத்திற்கும் மனிதருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் போதையிலிருந்து எமது எதிர்காலத்தையும் எதிர்கால சந்ததியினரையும் பாதுகாக்க நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும். இதற்காக எம்மால் முடிந்த உதவிகளை வழங்கி ஒத்துழைக்க வேண்டும். கடைகளில் மதுபானங்களும், சிகரட், புகையிலை போன்ற புகைத்தல் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனைத் தடுக்க கடுமையான சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டுள்ள போதும் அதனைக் கட்டுப்படுத்துவதென்பது சவாலான ஒன்றாகவே காணப்படுகிறது.

இதனால் பொது இடங்களில் மதுபானம் அருந்தவோ, சிகரட் புகைப்பதோ கூடாது என கடுமையான சட்டத்தினை அரசு உருவாக்கி உள்ளது. நாம் மேலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றால் அதை தடுக்க வேண்டும். குறிப்பாக பாடசாலையில் கற்கும் நாம் போதைப் பொருள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். போதைப் பொருள் தொடர்பான ஆக்கங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் என்பவற்றை வெளியிட வேண்டும். நாடகங்களின் மூலம் போதையைப் பற்றி விளக்கலாம். போதைப் பொருள் பயன்படுத்துவோருக்கு அதன் தீமைகள் குறித்து அறிவுறுத்தி அப்பழக்கத்திலிருந்து அவர்களை மீளெழச் செய்ய வேண்டும். இவ்வாறு சிறுவர்களாகிய நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மேலும் ஜுன் 26ம் திகதி உலகப் போதைப் பொருள் ஒழிப்பு தினமாக உள்ளது. நாட்டிற்கும் வீட்டிற்கும் கேடு விளைவிக்கும் போதைப் பொருட்களைத் தடுத்து நிறுத்துவதோடு அவற்றை முழுதாக ஒழிக்க வேண்டும் எனக் கொள்கையை வகுப்போம். தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை விற்போரிற்கு சிறைத் தண்டனைகள் வழங்குவதோடு பதினெட்டு வயதிற்கும் குறைவானோருக்கு மதுபானம் விற்பனை செய்வோருக்கு தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறு அரசோடு மக்களாகிய நீங்களும் சிறுவர்களாகிய நாமும் விழிப்புணர்வோடு செயற்பட்டு போதை பொருள் பாவனையை ஒழிப்போம்.

**S.மிஷ்டிகா**

**தரம் -10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதியார் கவிதைகளின் சமுகநீதி

## மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம்

நவீன தமிழ் கவிதைகளின் தகப்பன் தான் நம் மீசைக்கவிஞன் பாரதியார். யாமறிந்த மொழிகளிலே தமிழ் போல் இனிதாவதெங்கும் காணோம் என தமிழை வியந்து போற்றுகிறார் பாரதியார். தமிழுக்கு தொண்டாற்றிய பலர் அவர்களில் பாரதியார் தனக்கென்று தனியிடம் அமைத்துள்ளார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டையபுரத்தில் 1822 மார்கழி 11ம் திகதி சின்னச்சுவாமிக்கும், இலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியம். இவருக்கு ஐந்து வயது இருக்கும் போது இவரது தாயார் காலமானார். இவர் ஏழு வயதிலேயே கவிதைகளை எழுத ஆரம்பித்து விட்டார். இவருக்கு பதினொரு வயது இருக்கும் போது இவரது கவிபாடும் ஆற்றல் கண்டு எட்டையபுர மன்னன் அவையில் இவருக்கு **“பாரதி”** எனும் பட்டத்தை வழங்கினர். அன்று முதல் இவர் பெயர் சுப்பிரமணிய பாரதியார் என்றானது. இவர் தமிழ், தமிழர் நலன் பெண்விடுதலை, சமூகநீதி என்பவற்றிற்காகத் தனது கவிதைகளால் குரலெழுப்பினார். இவர் பெண்விடுதலைப்பாடல்கள், சமூக விடுதலைப்பாடல்கள், சிறுவர் பாடல்கள், பக்திப்பாடல்கள் இவ்வாறு பல வகையான பாடல்களைப் பாடியுள்ளார். இவரை மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த கவிஞன் என்றால் அது மிகையாகாது.

பாரதியார் இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்று அவற்றைத் தழுவி அழகான பல கவிதைகளை எமக்குத்தந்துள்ளார். இவை இலகு நடையும், இலக்கிய நயமும், பொருள் செறிவும் கொண்ட புதிய கவிதைகளாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைகளை தமிழுக்குத் தந்த பெருமை பாரதியையே சாரும். கண்ணன்பாட்டு, குயிற்பாட்டு, பாஞ்சாலிசபதம், பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, பெண்கள் விடுதலைக் கும்மி, புதிய ஆத்திசூடி போன்ற புகழ்பெற்ற காவியங்களை எழுதியுள்ளார் பாதியார். இவர் எழுதிய வசனக்கவிதைகள் தவிர பெரும்பாலான கவிதைகள் சொல்லோசை சந்தங்களுடன் கூடியதாக காணப்படுகின்றன.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் ஆணாதிக்கம் மேலோங்கி பெண்கள் மீதான அடக்குமுறைகள் அதிகமாக காணப்பட்டன. பெண்கள் கல்விகற்க கூடாது, ஆண்களுக்கு இணையாக வேலை செய்யக்கூடாது, சிறுவயது திருமணம், சீதனக்கொடுமை இவற்றிற்கு எதிராக குரலெழுப்பி சமூக நீதியை நிலைநாட்டப் போராடினார். “ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையெண்றொண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்” என பெண்கள் விடுதலைக்கும்மீ கவிதையில் குறிப்பிட்டுள்ளார். “மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமை தம்மை கொழுத்துவோம்” என பாடியுள்ளார். பெண்கள் கல்வி கற்க வேண்டும். சுதந்திரமாக வாழவேண்டும் விரும்பியவர்களை திருமணம் செய்ய வேண்டும் ஆண்களுக்கு இணையாக வேலை செய்ய வேண்டும் என சமூகத்திற்கு வலியுறுத்தினார். “வீட்டுக்குள் பெண்களை பூட்டிவைப்போம் எனும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்” எனும் வரிகளினூடாக வெளிப்படுத்துகின்றார். பிற்காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கும், பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்குமான விதை அன்று பாரதியாரால் போடப்பட்டதாகும். பாரதிகண்ட புதுமைப் பெண்கள் இன்று தலை நிமிர்ந்து வாழ அன்று பாரதியார் போராடவேண்டி இருந்தது.

பாரதியார் வாழ்ந்த காலகட்டத்தில் சாதிகளினால் மக்களிடையே ஒற்றுமை எனும் பண்பு இல்லாமல் இருந்தது. செல்வாக்குக் கொண்டிருந்தவர்கள் மக்களின் அச்சத்தைப் பயன்படுத்தி அவர்களை அடிமைபோல் நடத்தினர். மக்களின் அச்சத்தை நீக்கி அவர்களின் வீரத்தை வெளிக்கொணர பாதியார் பல பாடல்களைப் பாடி மக்களின் துணையினாலும் அவ்வச்சத்தில் இருந்து வெளியேறினர். அந்தவகையில் அவர் பாடிய பாடலுக்கு உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"**

சாதிபேதமின்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ சிறுவர்களுக்கு இதனை வலியுறுத்திப் பின்வரும் பாடலை நல்ல விழுமியக்கருத்துக்களுடன் எமக்குத்தந்துள்ளார்.

**"ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா**
**ஒரு குழந்தையை வையாதே பாப்பா"**

இவ்வாறு நல்ல கவிதைகள் பலவற்றை எமக்கு தந்த மகாகவிஞன் பாரதியார் தான் வாழ்ந்த காலத்தில் தமிழையும், தன்தேசத்து மக்களையும் நேசித்து இருண்டு கிடந்த அவர்களது வாழ்வில் ஒளியூட்டியவர். தன் கவிதைகளாலே மக்களின் பகுத்தறிவை வளரச் செய்து உதவியவர். அவர் காட்டிய பாதையில் நம் தமிழையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்துவோம்.

**றா.டெனிஸா**
**புனித சிசிலியா பெண்கள் பாடசாலை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதியார் கவிதைகளில் சமூகநீதி

## மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் இரண்டாம் இடம்

தமிழ் இலக்கிய வானில் சுடர் விட்டொளிரும் விண்மீன் பாரதியார். அவர் மகாகவி, புரட்சிக்கவிஞர், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்த ஒப்பற்ற மகாகவி.

எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் 1882ம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவர் தம் பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தை பாலித்திட விரும்புவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக பாடல்கள் மூலம் உரமூட்டியவர். புரட்சிகரமான கருத்துக்களை பாடல்களிலே புகுத்தியவர்

“தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடக்கையிலே இலகு பாரதிப்புலவன் தோன்றினான்.” என்றொரு கவிஞர் பாரதியினைக் குறிப்பிடுகின்றார். அடிமைத்தன எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண் உரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு, சமூக நீதி என்பன எல்லாம் பாரதியாரின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. சமூகக் கொடுமைகளையும், மூடப்பழக்கவழக்கங்களையும் கவிதைகளாகப் பாடிய பாரதியின் கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற ஒப்பற்ற காலத்தால் அழியாத கவிதைகளையும் அவர் தந்துள்ளார். கோழைகளையும் வீரம் கொள்ளச் செய்யும் சக்தி மிக்கவை இவரது தேசிய பாடல்கள் ஆகும். இவரது தேசிய பாடல்களில் உளம் நெகிழ்ந்த நாமக்கல் கவிஞர்

**“படித்தறியா மிக ஏழைக்கிழவனேனும்**
**பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்..........”**

என்று ஆவேச உணர்வுடன் பாடுகின்றார். பாரத நாட்டின் சுதந்திரத்தை கனலாக வீறுகொண்டெழச் செய்யும் சக்தி பாரதியாரின் பாடல்களுக்கே உண்டு என்பதை நாமக்கல் கவிஞரின் கவிதைகள் நற்குணர்த்துகின்றன.

பாரதியாரை நேரில் அறிந்து உணர்ந்து அவர் கவிதைகளிலே ஊன்றித் திளைத்த பாவேந்தர் பாரதிதாசன் பாரதியினைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

**“பைந்தமிழ்த் தோப்பாகன்! அவன் ஒரு**
**செந்தமிழ்த்தேனீ! சிந்துக்குத் தந்தை............”**

என்று ஆரம்பிக்கின்றார்.

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களும்

**“பாட்டைப் பாடொருவன் வந்தான் அடா – அவன்**
**பாட்டைப் பண்ணோடொருவன் போனான் அடா...........”**

என பாரதியினைப் போற்றுகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞரான பாரதியார் பண்டைய மரபைப் பேணியதோடு மரபை மறுத்து தெம்மாங்கு, பள்ளு, சிந்து, கண்ணி முதலிய நாட்டுப்புற பாடல்களின் அமைப்பில் கவிதைகளை இயற்றியுள்ளார். இதனாற்றான் பாரதியாரை புதுமைக் கவிஞர் என்று புதுப்புது கவிஞர்கள் போற்றியுள்ளார்கள். எளிய இலகுவான சொற்களைப் பயன்படுத்தி அநேக கட்டுரைகளை எழுதியுள்ளார். சின்னச்சின்ன வார்த்தைகள், உயிர்த்துடிப்புள்ள சொற்கள், பல்வகைத்திறன் என்பன எல்லாம் இவரது கட்டுரைகளில் காணலாம்.

பாரத நாட்டின் பழமைகளிலும், பெருமைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த பாரதியார் வளரும் அறிவுப்புதுமைகளிலும் நாட்டம் உடையவராகத் திகழ்ந்தார். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**"வெள்ளிப்பனி மீதுலவிடுவோம் - அடி**
**மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம்"**

என்னும் வரிகள் அடையாளப்படுத்துகின்றன.

சமூகநீதி என்பது யாதெனின் மக்களுக்கிடையேயுள்ள நேர்மை என்று சுருக்கமாகக் கூறலாம். சமூக நீதிக்காகப் பேராடிய உத்தமர்களுள் பாரதியும் ஒருவராகத் திகழ்ந்தார். இவர்

**"ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்திருக்கலாகாது பாப்பா"**

என்று சிறுவர்களுக்கு சோம்பலின்றி சுறுசுறுப்பாக செயற்படும்படியாக இப்பாடலடிகள் மூலம் கூறியுள்ளார். இவ்வாறு சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் சமூகநீதியைப் போன்று பல்வேறுபட்ட நற்பண்புகளையும் அவர் பாட்டுத் திறத்தாலே வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தில் நடைபெறும் கொடுமைகளையும் சமூக அநீதிகளையும் எடுத்துக்கூறி சமூக நீதியை எவ்வாறு உருவாக்கலாம் என்பதையும் அவற்றை எவ்வாறு பின்பற்றலாம் என்பதையும் இவர் கூறியுள்ளார். ஆனாலும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுயநலத்திற்காக சமூகநீதியை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதியார் வாழ்ந்த காலப்பகுதியில் சமூகத்தின் அடிமைத்தனத்தை நீக்கி, சமூக நீதிக்காகப் போராடினாலும் அவர் அகால மரணத்தின் பின் சமூகநீதியை நிலைநாட்ட ஒருவராலும் கூடாமற் போயிற்று.

இன்றைய நாடுகளின் சூழ்நிலை சமூகநீதியை மறந்த வண்ணமாகவும், சமூகநீதிக்கும் இச்சமுதாயத்திற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்ற வகையில் இலஞ்சம், ஊழல், சமூகநீதி, அடிமைத்தன வாழ்வு மற்றும் சுயநலமும் அதிகரித்த வண்ணமும் காணப்படுகின்றது. பாரதியின் சமூகநீதிக் கொள்கைகளை பின்பற்றாது உலகப் போக்கிலே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். சற்று சிந்தித்து நாமும் சமுதாயம் மாற நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். வழிகாட்டியான பாரதியின் சமூக நீதியைப் பின்பற்றுவதே நமது கடமையாகும்.

"எட்டயபுரத்தின் இளைத்த தெருவிலே அந்தப்பிஞ்சு சூரியன் மறைந்தது" என்ற கவிஞர்களின் கவிதைக் கேற்ப பாரதியார் 1921இல் செப்டெம்பர் மாதம் 11ம் நாளிலே மறைந்தார். பாரதியார் மறைந்தாலும் அவரது கவிதைகள் மறையாது இன்றும் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. அவரது அடிச் சுவடுகளில் காலம் முழுவதும் புதுக் கவிஞர்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர்.

பாரதியின் சமூகநீதிக்கிணங்க நாமும் சமூகநீதிக்காக பாரதியை முன்மாதிரியாக வைத்து போராடுவதே நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

**அ.அபிசாயினி**
**புனித இக்னேசியஸ் வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதியார் கவிதைகளில் சமூக நீதி

## மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் மூன்றாம் இடம்

தமிழின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரியார்களில் ஒருவர் தான் மகாகவி பாரதியார். இவர் பல வாழ்க்கைக்கு அவசியமானதுமான கருத்துக்களை கவிதைகளாகக் கூறியிருக்கிறார். இவர் இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரம் எனும் இடத்தில் பிறந்தார். இவர் சிறுவயதில் இருந்தே கவிதைகளையும், பாடல்களையும் எழுதுவதற்கான ஆற்றலும் திறமையும் இவரிடம் இருந்தது. இதனால்தான் இவர் மனிதனது ஒவ்வொரு கட்டத்திற்கும் தேவையான சமூகநீதிக் கருத்துக்களை பாடல்களாகவும், கவிதைகளாகவும் மிகவும் அழகாக கருத்துக்களைக் கூறியிருக்கிறார். இதனால்தான் நாம் இவரை பெரிய மகானாக நம் வாழ்க்கையில் நினைத்து அவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர் கூறிய கருத்துக்களையே வேதவாக்காக நினைத்து அதன்படி நம் வாழ்வில் நடந்து கொள்கின்றோம்.

இவரது கவிதையில் சமூகநீதி பற்றி மிகவும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது சமூகத்தில் மனிதன் பிறருடன் நடந்து கொள்கின்ற விதம், ஏனைய மனிதர்களையும் மதிக்க வேண்டும் என்பது பற்றியும் கவிதைகளில் அழகாக விளக்கியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் பலவிதமான தவறான செயல்களில் ஈடுபடுகின்றான். இதற்கு காரணம் ஒழுக்கத்தை முறையாக கடைபிடிக்காமையே இதற்கு காரணமாக அமைகின்றது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தனது கருத்துக்களில் சமூகநீதி எவ்வாறு தோன்றுகின்றது. இதனால் மனிதன் அடையும் சாதக, பாதகமான விடயங்கள் பல உள்ளன. ஏன்பதையும் சுட்டிக்காட்டி நிற்கின்றார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தான் வாழ்ந்த காலத்தில் பார்த்த, அனுபவித்த அனைத்து விடயங்களையுமே தனது கவிதையாகவும், பாடல்களாகவும் வடிவமைத்துள்ளார். அவரது வாழ்க்கை காலத்தில் மட்டுமே சமூகநீதி இடம்பெற்றிருக்கும் என்று நாம் ஒருபோதும் நினைக்கக் கூடாது. அனைத்து மனிதர்களின் வாழ்க்கையிலும் சமூகநீதி என்பது மிகவும் கட்டாயமாக இருந்திருக்க வேண்டும் என்பதாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்த சமூகநீதியில் தான் பெண்களின் பாதுகாப்பையும், அவர்களின் உரிமைகளையும், அவர்களது கடமைகளையும் மிகவும் அழகாக கூறியுள்ளார். அதனால் தான் நாம் பாரதியாரை பெண் விடுதலைக்காக, பெண்கள் சமூகநீதியில் எவ்வாறான இடத்தையும் பெறுகின்றார்கள் என அழகாக குறிப்பிட்டு உள்ளார். அவர் பெண்களைப் பற்றி அழகாக ஒரு வரியில் கூறியுள்ளார். அதாவது "தையலைப் போற்று" என்பதாகும். ஏனவே நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் சமூகநீதியில் பெண்களும் அடங்கி உள்ளார்கள் என்பதைக் அறிந்து கொள்ள வேண்டும்.

புாரதியார் ஒவ்வொரு மனிதனும் தங்களது வாழ்நாளில் சமூகத்தில் ஒற்றுமையாகவும், அந்நியோன்னியத்துடன் செயற்பட்டால் சமூகநீதி ஒருநாளும் சீர்குலையமாட்டாது. ஓவ்வொரு மனிதனின் நடத்தைக் கோலங்களில் தான் சமூகநீதி எவ்வாறான நிலையில் காணப்படுகின்றது என்பதை நாம் உறுதி செய்யத்தான் வேண்டும். சமூகத்தில் மனிதன் ஒருவன் குற்றம் செய்தால் அவனை நாம் சமூகத்தில் இருந்து ஒருநாளும் விலக்கி வைக்கக் கூடாது. அவன் தவறு செய்வதற்கு அவனது வாழ்க்கையில் ஏதாவது ஒருவிடயம் துன்பம் நிறைந்ததாக காணப்பட்டிருக்கலாம். அதனால் தான் அவன் சமூகநீதியில் இருந்து விலகி சமூகஅநீதியை நாடிச் சென்று இருக்கிறான். அவனுக்கு தவறு செய்யத் தூண்டிய காரணத்தை அறிந்து இன்னும் ஒருதடவை தவறு செய்யாமல் இருப்பதற்கு சக மனிதர்கள் தான் அதை கண்ணும் கருத்துமாக பார்க்க வேண்டும் என்பதையும் தனது பாடல் வரிகளிலும் மிகவும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். நமது பாரதியார் ஆவார்.

இவர் ஒவ்வொரு சமூக நீதியும் எவ்வாறான விடயங்களில் தங்கியுள்ளது என்பதையும் குறிப்பிட்டு உள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒவ்வொரு சமூகநீதியும் மிகவும் முக்கியமான விடயங்களில் ஒன்றான சமூக ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது. நமது சமூகம் எந்தவித சண்டைகளும் இல்லாமல் ஒருவருக்கொருவர் அந்நியோன்யமாக இருப்போமானால் சமூகநீதி மிகவும் பலத்துடன் கட்டியெழுப்பப்படும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் சமூகநீதி குறைந்து கொண்டே வருகின்றது. “ஒற்றுமையே பலம்” எனும் பொன்மொழி உள்ளது. இது பாரதியாரின் சமூகநீதியில் முக்கிய காரணியாக செல்வாக்குச் செலுத்துகின்றது. சமூகநீதி என்பது மிகவும் கட்டாயமாக நம் வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டியது ஆகும். ஒருநாட்டில் சமூகநீதி எவ்வாறு தங்கியுள்ளது என்பது தான் ஒருநாட்டின் சிறந்த ஒரு அடையாளமாகும். சுமூகநீதியை கடுமையான முறையில் மீறுவோருக்கு எச்சரிக்கைகளையும் தண்டனைகளையும் வழங்க வேண்டும். என்பது மிகவும் அவசியமானது.

சுமூகநீதி முறையாக நடைமுறையில் இருப்பதற்கு சமூகத்தில் அடிப்படையான காரணியாக விளங்குவது குடும்பமாகும். குடும்பமொன்று அவர்களது வாழ்க்கையில் எவ்வாறு ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கொண்டு தான் சமூகநீதியை தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்றைய நவீன உலகத்தில் சமூகநீதி என்பது அற்றுப் போய் விடும்;. என்ற நிலைமையில் தான் உள்ளது; என்றே நாம் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே மனிதர்களாகிய நாம் பாரதியார் கூறிய சமூகநீதிகளைக் கடைபிடித்து வாழ வேண்டும்.

**சி.டிலக்ஷினி**
**ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம்**

**வெற்றி வந்தால் பணிவு**
**அவசியம் ~**
**தோல்வி வந்தால் பொறுமை**
**அவசியம்~**
**எதிர்ப்பு வந்தால் துணிவு**
**அவசியம் ~**
**எது வந்தாலும் நம்பிக்கை**
**அவசியம் ~**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பால் வாழ்வை வளமாக்கு

## மாணவர்களுக்கான கவிதைப்போட்டியில் முதலாம் இடம்

புழுதிப்படுக்கையில் மறைந்து போன பழமையை கூட
புதையாமல் எமக்கு கூறிய புத்தகமே – உன்னை
உணர்ச்சி ததும்பப் பெற்ற மானிடன்
சிந்தனைக் களஞ்சியமாம் நூலகம் அதனில் நாடி வந்தானே!

முன்னுரையில் தொடங்கிய நூலினை
முடிவுரையில் மூடி முடித்து விடாதே – மானிடா
முதல் தொடக்கம் முடிவு வரை மட்டுமல்ல
முன்னேற்றம் காண்கையில் உன்னோடு தொடர்ந்திடும்

வெண்மணல் போன்ற தாள்களிலே
கறுமை நிற மாணிக்கமாம் சொற்கள் - இவைதான்
பழங்கவியின் மனதினைக் கூறியதோடு
புதுமை கண்ட மனிதனுக்கும் பாதை காட்டியது

நல்ல ஆசானுக்கு ஈடான ஏடுகளை
நாம் கற்ற போது பல தடவைகள் தோழனாகியது
நாம் தடுமாறிய வேளையில் வழிகாட்டும் வீதியானது
இப்போது தனிமையில் என்னை தாலாட்டும் தாய் நீயே பனுவலே.

**பகிரதன் பவித்திரா**
**ஸ்ரீ.சி.வி.ம.வித்தியாலயம்**
**அமிர்தகளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பால் வாழ்வை வளமாக்கு

### மாணவர்களுக்கான கவிதைப்போட்டியில் இரண்டாம் இடம்

புத்தகம் எனும் கடலிலே மூழ்கி
சிப்பியாய் நீ நுழைந்து
முத்து எனும் அறிவைத் தேடி
புத்தியுடன் வெளியேறு
வித்தகர் விளைந்திடும்
புத்தக வயலிலே
நூலினை வாசித்து
அறிவினைப் பெருக்கிடு
நல்லொழுக்கத்தை தருவது
தாயின் பாசமே
நல்லறிவினைத் தருவது
புத்தக வாசிப்பே
வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது என்றாலும் வாசிப்பதனால்
அது எம்மை விட்டு நீங்கி விடும்
இருள் அகற்றிடும் விளக்கு வாசிப்பு
ஒளி கொடுத்திடும் விளக்கும் வாசிப்பு
படிப்படியாய் உயர்ந்திடும் வாசிப்பு
படிக்கட்டாய் உயர்ந்திடும் வாசிப்பு
உடலுக்கு பயிற்சி உடற்பயிற்சி
மூளைக்கு பயிற்சி வாசிப்புப்பயிற்சி

**அன்ரன் பெலிண்டா**
**விபுலானந்தா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வித்தகனாகிட புத்தகம் நாடு

### மாணவர்களுக்கான கவிதைப்போட்டியில் மூன்றாம் இடம்

தேனை நாடிச் செல்வது தேனீ
உணவை நாடிச் செல்வது எறும்பு
பாலை நாடிச் செல்வது கன்று – அதுபோல்
புத்தகம் நாடிச் செல்வது மனிதன்
வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்
வாழ்வெல்லாம் நல்லொழுக்கம் நல்லவனாக்கும்
வாசித்தால் நல்ல ஞானியாவாய்
வாழ்நாளெல்லாம் சிறந்த வித்தகனாவாய்
வரம் பெற்றிட ஆலயம் நாடு
வாழ்வு பெற்றிட இறைவனை நாடு
அன்பை பெற்றிட அன்னையை நாடு
வித்தகனாகிட புத்தகம் நாடு
மனம் விட்டு விட்டு படிக்க
அறிவு நமக்கு கிடைக்க
வித்தகன் எனும் பட்டம் கிடைக்க - புது
சரித்திரம் நாம் இங்கு படைக்க
அன்பை நாடினால் அன்னையாவாய்
அறிவை நாடினால் அதிபுத்திசாலியாவாய்
தேகம் இருந்தால் உற்சாகமாய் - சிறந்த
புத்தகம் இருந்தால் வித்தகனாவாய்
அறிவுச் சாலையில் மிதந்திட - இங்கு
அலையலையாய் விடயங்கள் திரண்டிட
கல்வியில் புதுயுகம் படைத்திட
வித்தகனாவாய் புத்தகம் நாடிட.

**R.அபிராமி**
**ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு மாதம்

வாசிப்பு மாதமாம் நூலகத்திலே
வகைவகையான நூல்கள் வரிசையிலே
நுண்ணறிவூட்டிடும் நூலகமாம்
நுகர்வோர்கள் கூட்டம் ஆயிரமாம்

பொன்னான நேரத்தை மண்ணாக்காமல்
போய் பலனடைய மக்கள் நலன்கருதி
வாய்ப்புக்கள் பலவும் செய்து
வகையான நூல்களால் ஆனது நூலகம்
கன்னியரும் காளையர்களும்
கற்றறிந்த பெரியோர்களும்
காலம் நேரம் கருதாது
கல்வியறிவைக் கற்றொழுகும் கல்விமான் கூட்டம்

பத்திரிகை சஞ்சிகை வாசிப்பு பழக்கவழக்கத்தால்
பலநாளும் எல்லோரும் நூலகத்தில் கூடி
பார் போற்றும் பரவசமூட்டும் இனிய செய்தியை
பரிவுடன் படித்து பயன் பெறும் இடமாம் நூலகம்

வாசிப்புமாதத்தில் வாசிப்புப்பழக்கத்தை நேசிக்க
வகைவகையான பத்தரிகைகளை வாரந்தோறும் பார்த்து
ஆக்கப்பூர்வமான அரசியல் செய்தியும்

மாணவமாணவியர்களின் கல்வியின் நோக்கமாய்
கரிசனையோடு காலம் தாழ்த்தாமல்
உன்னிப்பராதாயிருந்து உசாத்துணைப்பிரிவிலே
உயர்தர வகுப்பு நூல்களை உற்சாகமாக கற்கின்றனர்
நூலகத்தில் நுண்ணறிவை நுகர்ந்தோர் பலர்
நூல் பெருமையைப் பெற்று வளந்ததே சமுதாயம்
கல்விக்கு உயர்ச்சியூட்டுவதற்கு காரணம் நூலகம்
கற்றறிந்தோர் பெருமையை தாங்கி நிற்பது நூலகம்

வாசிப்பை நேசித்து வளம் பெறும் வாசகர் கூட்டம்
வருடத்தில் ஒருமுறை வாசிப்பு மாதம்
வந்தோரை வாழவைக்கும் மட்டுமா நகரின் பொற்சலனம்
**வாழ்க வாழ்க வளர்க வாசிப்பு மாதம்.**

**ஆக்கம்: க. செல்லத்தம்பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பும் நூலகத்தின் வகிபாகமும்

நூலகம் (டுடிைசயசல) என்பது பொது அமைப்புக்கள் நிறுவனங்கள அல்லது தனிநபர்களால் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்ற தகவல் மூலகங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பு ஆகும். அறிவை வளர்க்கும் புத்தகங்கள் அனைத்தும் ஒன்று கூடும் இடம் நூலகம் ஆகும். மரபு வழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பு எனலாம். அறிவுப் பெட்டகத்தை திறக்கும் திறவுகோல் நூலகம் எனலாம்.

கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது முதியோர் கருத்தாகும். பல தரப்பட்ட நூல்களைத் தேடிக் கற்பதன் மூலம் அறிஞன் ஆகிறான் என்று கூறப்படுகிறது. பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை மாணவர்கள் தொடர்ச்சியாக வாசிப்பில் ஈடுபடுவதன் மூலம் உண்மையான வாசிப்பு அறிவாற்றலை பெறமுடியும். இதற்கு நூலகமே முக்கியம் வாய்ந்ததாக அமைகிறது.

பொது நூலகத்தில் காணப்படும் நூலக சேவைப்பிரிவுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- பத்திரிகைப் பிரிவு
- சஞ்சிகைப் பிரிவு
- நூல் இரவல் வழங்கும் பிரிவு
- உசாத்துணைப் பிரிவு
- சிறுவர் பிரிவு
- சிறுவர் கேட்போர் கூடம்
- பொது கேட்போர் கூடம்

பல்கலைக்கழக நூலகங்களைப் பொறுத்தவரையில் கணனி மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் நூலகங்களுக்கேற்ப வகுக்கப்பட்டுள்ளன.

1. Cataloguing - பட்டியலாக்கம்
2. Circulation - பரிமாற்றம் (நூல்கள்)
3. Acquisitions - சேர்க்கை
4. Others - ஏனையவை

இவ்வாறான செயற்பாடுகள் நூலகத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வாசிப்பு என்பது மக்களின் அடிப்படைத் தேவையாக மாற்றம் பெற்று வருகின்றது. நவீன உலகில் மக்களின் தேவையாகும். எழுத்தறிவு என்பதன் முக்கியமான பரிமாணம் வாசிப்பு ஆகும். வாசிப்பு ஒருவனை முழுமனிதன் ஆக்குகிறது என்ற பிரான்சில்பேக்கன் எனும் அறிஞரின் கூற்றாகும்.

ஒவ்வொரு மனிதரது தன்னிலை வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமூக வளர்ச்சிக்கும் வாசிப்பு விசை அடிப்படையாக அமைகிறது. பரந்துபட்ட வாசிப்பும், ஆழமான வாசிப்பும் மட்டுமே அறிவுக்கான அடித்தளம் போடப்படும். வாசிப்பின் முக்கியத்துவம் தெரிந்து வாசிக்கும் சமூகமாக இருக்கும் சமூகமே அறிவுச் சமூகமாக விருத்தி பெறும். மாணவர்கள் தொடர்ந்து வாசிப்பில் ஈடுபடுவதனால் அவர்களது ஆளுமை விருத்தியடைவதுடன் ஆக்க மறுமலர்ச்சி கொண்டவர்களாகவும் புதிய கண்டு பிடிப்பாளர்களாகவும் உருவாகுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**பாடசாலை நூலகத்தை எடுத்து நோக்கில்**

01. நடமாடும் புத்தகப் பெட்டிமுறை (ஆழடிடைந டுடைசயசல டீழழம டீழஓ)
நூலகத்தில் ஆசிரிய நூலகரும் மாணவ தலைவர்களும் தந்தம் வகுப்புக்களில் வாசிப்புக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஊக்குவிப்பவராகவும் இருப்பர். இதற்குப் புத்தகப்பெட்டிமுறை உதவுகிறது.

02. நூலகப்பாடவேளை மற்றும் ஓய்வு நேரம்
இது னுசழி நளநசல யனெ சுநயன (னுநுசு) நாளாந்தம் ஒன்று கூடும் நேரத்தில் ஆங்கில வாசகர்களை வாசிக்க விடுதல் இவ் உத்திகளைப் பயன்படுத்தலாம். வகுப்பறையிலும் பாடசாலை நூலகத்திலும் வாசிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

03. நூலின் முக்கிய பகுதிகளை காட்சிப்படுத்தல்
மாணவர்கள் கவரக்கூடிய நூலின் முக்கிய பகுதிகளை காட்சிப்படுத்தல் விளம்பரப்பலகை காட்சிப்படுத்தல்.

04. போட்டி நிகழ்வுகள் ஒழுங்கு செய்தல்
மாணவர்களின் வாசிப்பு திறன் மேம்படுத்தல் வினாவிடைப்போட்டி கட்டுரைப்போட்டி பேச்சுப்போட்டி நடாத்துதல்.

05. மாணவர்கள் ஆக்கங்கள் எழுதுதல்.
கையெழுத்து சஞ்சிகை முதலான ஆக்கங்களை எழுதுதல் புதிய நூல்களைத் தேடியறிந்து வாசித்தல்.

06. நூல் கண்காட்சியை நடாத்துதல்
மாணவர்களுக்கு வாசிப்பு மாதம் நூலக வாரத்தில் நூல் கண்காட்சியை ஒழுங்குபடுத்தி நடாத்துதல்.

07. செய்திப்பலகை தயாரித்தல்
மாணவர்களுக்கு சுவரொட்டி காட்டூன் கண்காட்சிகள் மற்றும் தினசரிப் பத்திகையான வீரகேசரி, தினக்குரல், தினகரன் பத்திரிகை ஆக்கங்களை தலைப்புச் செய்திகளை காட்சிப்படுத்தல்.

08. திறமை காட்டும் மாணவர்களை கௌரவித்தல்
போட்டி நிகழ்வுகளில் திறமை காட்டும் மாணவர்களுக்கு விருது பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தல்.

இவ்வாறான செயற்பாடுகளை பாடசாலை நூலகங்கள் மேற்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமகால வாசிப்பும் நூலகத்தின் வகிபாகமும்

வாசிப்பு என்பது அடிப்படை மொழித்திறன் மட்டுமல்ல அது வாழ்க்கைத் திறனாகின்றது. எழுத்து வழி வாசிப்பு காண்பிய வாசிப்பு என்ற நிலைகளல் விரிவடைந்து வாசிப்பு செயற்பாடு வாழ்நாள் முழுவதும் கற்பதற்குரிய ஆற்றலை நீட்சி கொள்ளச் செய்கிறது.

வாசிப்புக்கான உரிமை கல்விக்கான உரிமையுடன் ஒன்றிணைந்தது. வாசிப்பு ஆற்றல் கற்றல் ஆற்றலை மேம்படுத்தி ஆளுமையின் மேம்பாட்டுக்கு இட்டுச் செல்கின்றது. உடற்பயிற்சயில் உடல் வலுப்பெறுதல் போன்று வாசிப்புப் பயிற்சியில் உள்ளம் வலுப் பெறும் உள்ளத்தால் அறிக்கை அழைப்பு வளர்ச்சியுற்றிருக்கும். சமூக வரலாற்று வளர்ச்சிக்கும் வாசிப்பு வளர்ச்சிக்கும் தொடர்பு உண்டு. பொதுக்கல்வி வளர்ச்சிக்கு முன்னான சமூகத்தின் வாசிப்பு அன்று மேட்டுக்குடி மக்களின் செயற்பாடாக இருந்தது.

ஐரோப்பியாவில் தோற்றம் பெற்ற அறிவொளிக்காலமும் தொழிற்புரட்சியும் அனைத்து மக்களுக்குமான கல்வி வளர்ச்சியும் உலகளாவிய நிலையிலே செல்வாக்குகளை ஏற்படுத்தின.

காலனித்துவ நாடுகளில் நிகழ்ந்த கல்வி விரிவாக்கம் எழுத்தறிவுப் பரவலை ஏற்படுத்தின. நூலகத்தின் (Text) செய்தியை அல்லது அதனாற் கையளிக்கப்படும் பொருளை விரைந்து விளங்கிக் கொள்ளல் வாசிப்பு வளர்ச்சியினூடாகவே ஈட்டப்படும் திறனாகும்.

செய்தி கையளிக்கப்படும் செயற்பாடு கேடலாக்கம் (coding) என்பதுடன் தொடர்புபடுகிறது. கோடற்கலை (Decoding) என்று குறிப்பிடப்படும் செய்தி கிரகித்துக் கொள்ளும் மொழியைக் கற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் வாசிப்பின் மீது ஊன்றிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நல்ல வாசகர் வாசிப்பை ஒரு மகிழ்ச்சியான செயற்பாடாகவும் இலகுவான செயற்பாடாகவும் தன்னியக்கையான செயற்பாடாகவும் கொள்வர். அந்தநிலைப் பயிற்சியானது அதனோடு தொடர்புடைய ஊக்கலிலும் எட்டப்படுகிறது.

வாசிப்பு என்பது சொற்களோடு பழகும் செயற்பாடு. அறிவை உளவியலாளர் அதனால் சொற்களுடன் இடைவினை கொள்ளும் செயற்பாடு என்று குறிப்பிடுவர். வளமான பேச்சு மொழிச் சூழலில் வாழும் சிறுவர்கள் ஆற்றல் மிக்க வாசிப்பை முன்னெடுக்க வல்லவர்களாக இருப்பர். வாசிப்பை முன்னெடுப்பதற்கு பெற்றோர் ஆசிரியர்கள் நண்பர்கள் உத்தியோகத்தர் ஆகியோரின் முக்கியத்துவத்தை மாக்ஸிஸ் உலகின் கைகொட்சியின் அண்மை விருத்தி வலயம் என்ற கருத்தாளலில் தெளிவாக விளக்குகிறது. மேலும் 5 நிலைகளில் வாசிப்பை மேற்கொள்ளலாம். அவையாவன,

1. முகிழ்த்தெழும் முன்வாசிப்பு நிலையினர்
2. வாசிப்புப் பழகு நிலையினர்
3. கோடற்குலைப்பு நிலையினர்
4. வாசிப்பில் தேர்ச்சி பெற்றோர்.
5. வாசிப்பின் மேதாவியாளர்

- முன்வாசிப்பு நிலையில் பிறர் வாசிப்பு பார்க்கும் கேட்டும் வாசிப்பு அனுபவங்களை திரட்டிப் பெறலாம்.
- வாசிப்பு பழகுநிலையில் ஒலிகளையும் சொற்கள் சேர்மானங்களையும் ஒலி சேர்த்து உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- கோடற்குலைப்பு நிலையினர் சொற்கள் துலங்கிய ஒலி வேறுபாடு அறிந்து கொள்ளப் பல எழுத்துக்களையும் ஒலியையும் தனித்தனியாக இனங்காணல் தொகுப்பு நிலையில் புலக்காட்சி பெறல்.
- வாசிப்பில் தேர்ச்சி பெற்றோர் வாசிப்புடன் இன்று திறன் முன்னேற்றம் பெறுவர் கிரகிக்கும் திறன் முன்னெடுக்கப்படும் மேலும் வாசிக்க முன்னெடுக்கப்படும்.
- வாசிப்பின் மேதாவியாளர் பார்வையைச் செலுத்தி வேகமாகவும் சரியாகவும் வாசித்தல் கடினமான நூலாகவும் விருப்புடன் புலமை ஈடுபாட்டில் வாசித்தல்.

இவ்வாறான செயற்பாடுகள் சமகால வாசிப்பில் முக்கியத்துவம் பெறுகிறன.

வாசிப்பின் மகத்துவம் பற்றி அறிஞர்கள் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- ஆழில்லா ஊருக்கு அழகு பால் என்றும் பழமொழி நூலகம் இலாது ஊருக்கு அறிவு பாழ் என்பர்.
- ஒரு நூலகம் திறக்கப்படுவது ஒரு சிறைச்சாலை மூடப்படும் எனின் ஹேவித விக்டர் விஜயசேகரா
- ஆயிரம் புத்தகம் வாசிப்பதை ஒருவர் குறித்துக்காட்டும் வழிவகுத்தலை வழிகாட்டி (எலியஸ்சீசன்)
- புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கியை விட எளிய ஆயுதங்கள் புத்தகங்கள் (எலனின்)
- ஒரு மனிதன் காலத்தோடு ஏணியாக இருக்க வேண்டுமானால் நாளாந்தம் நான்கு புதினப்பத்திரிகைகள் வாராந்தம் இரண்டு வாரச்சஞ்சிகைகள் மாதம் ஒரு மாத வெளியீட்டையும் வாசித்தல் வேண்டும் என இலங்கையின் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆதர்சிகிளாக் கூறியுள்ளார்.
- ஓடும் போது விழுந்து விடுவோம் என்று நினைப்பதை விட விழுந்தாலும் எழுந்து ஓடுவேன் என்று நினைப்பவர் தான் ஜெயிப்பர்.
- வாசிப்பு பொழுதுபோக்கு அலல நாளாந்த கடமைக்கான வாசிப்பு செயற்பாடாகும்.
- புத்தகங்கள் போன்று சிறந்த நண்பர்கள் கிடைப்பது அரிது நண்பர்கள் மனமாற்றம் அடைந்து நம்மை விட்டுப் பிரிந்து விடலாம் ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்து உரையாடல் கற்பதற்கில்லை. நம்மை சேர்ந்து செய்வதும் இல்லை. நம்மைப் பிடிக்கவில்லை என ஒதுக்கி விடுவதும் இல்லை.

சித்திரமும் கைப்பழக்கமும் செந்தமிழும் நாப்பழக்கமும் என்ற கூற்றுக்கிணங்க வாசிக்க வாசிக்க தேன் உண்டநாவில் சொரியும். கிணற்றிலிருந்து அள்ளஅள்ள தண்ணீர் குறையாது. ஊறிக்கொண்டே இருக்கும். அதேபோல் வாசிக்க வாசிக்க அறிவு பெருகிக் கொண்டே செல்லும் என்பர்.

இலத்திரனியல் ஊடகத்தின் தாக்கத்தினால் அச்சு ஊடகத்தின் வாசிப்பு ஆர்வம் குறைந்து வருகிறது. நவீன தொழிநுட்ப முன்னேற்றம் Face book, WhatsApp, viber, internet news TV என்பவற்றால் ஏற்படும் மோகத்தினால் அச்சு இயந்திரம் ஊடகங்களான பத்திரிகை, சஞ்சிகை வாசிக்கும் ஆர்வம் குறைந்து வருகிறது. இதற்கு Mobile Phone அலைபேசி பாசனையின் தாக்கமும் காரணமாக அமைகின்றன.

இன்றைய சூழலில் வெறுமனே புத்தகங்களை வணிகப் பொருளாக மட்டும் நோக்காது மக்களிடம் அறிவைக் கையளிக்கும் மற்றும் உயிர்ப்புடன் வாசிப்புச் சூழலை வளர்த்திடும் பெரும்பணியில் ஈடுபடக்கூடிய சமூகப் பொறுப்புடன கூடிய பதிப்பகங்கள் எம்மிடையே உருவாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம், மகாத்மாகாந்தி, சுவாமி விவேகானந்தர், சுப்பிரமணியப்பாரதியார், பெரியார் அம்பேத்கர், தனிநாயகம் அடிகளார், சுவாமி விபுலாநந்த அடிகள், ரவீந்திரநாத், தாகூர், பெட்ரன்ட்ரசல்லெனின், அறிஞர் சித்திலெப்பை, அன்னைதிரேசா, அம்மையார் போன்றோரின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

மகாபாரதம், இராமாயணம், புராணம், இதிகாசம், பகவத்கீதை, திருக்குறள் போன்ற ஆன்மீக நூல்கள் அறிவு சாரந்த திறன்களை வளர்க்கின்றன. இதேபோல் குமுதம், ஆனந்தவிகடன், கல்சி போன்ற சஞ்சிகைகள மற்றும் வாழ்வியல் சார்ந்த சமூக நாவல்கள் சமூக இலக்கியங்களும் வாசிக்கும் ஆற்றலை வளர்க்கின்றன.

மேலும் இராஜராஜசோழன் தஞ்சைப் பெருங்கோயிலின் சிறப்புக்கள் சோழர் வரலாறுகள் போன்றவையும் அறிவுத் திறன்களை வளர்க்கின்றன. ஆற்றுப்படுத்தப்பட்ட அல்லது நல்வழிகாட்டப்பட்ட வாசிப்பு மௌனவாசிப்பு நன்கு வாசிப்போரே மாதிரி வடிவினராக கொடை வாசிப்பின் வேகம் அதிகரிக்கப்படும். கிரகித்தல் செயற்பாட்டின் போது ஒப்பு நோக்குதல் பிரித்தறிதல், தொகுத்தல், பொறுமை காணல் பிரச்சினை தீர்த்தல் விடுவித்தல் பிறிதொரு பொருத்தமான நிலையிலே பயன்படுத்துவதற்கு தயாராக வைத்திருத்தல் முதலியவை இடம்பெறும்.

உள அழுத்தங்கள் நெருக்கீடு ஆள்வதை விட வாய்ப்புக்கு மகிழ்ச்சி தூண்டல் வாசிப்பு துணைசெய்கிறது. சமகால வாசிப்பு செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு வாசிப்பு முகவரைமைப்பு The Reading Agency என்பதன் வகிபாகம் முதன்மை பெற்று பெரிய பிரித்தானியாவில் செயற்படும் ஒரு தொண்டு நிறுவனமாகும். அதிகளவு மக்கள் வாசிக்க செய்தல் வாசிப்பில் ஏற்படும் மகிழ்ச்சி பிறருடன் பகிர்ந்து கொள்ளல் வாசிப்பு இறை வாழ்வதற்கும் இடையிலான வழியாக அறிந்து கொள்ள முதலாளர் முகவரால் முகங்கொடுக்கப்படுவதுடன எதிர்கால சந்ததியினரின் சிறப்பான வாசிப்பு நிறைவான மொழியியலாளர் அறிவுள்ள சமூகத்தை உருவாக்க வழிவகுக்கும்.

3ம் உலகநாடுகள் எழுத்தாளன் வளர்வதில் வாசிப்பு சார்ந்த பால்நிலை சமத்துவம் குறிக்கோளுடன் இயங்கியது. தென்ஆபிரிக்கா, சம்பியா, தன்சானியா, இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், லாகோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

இவர்கள் பாடசாலை கலைத்திட்டத்தில் School Curriculum மாணவர்களின் வாசிப்பு திறன்சார்ந்த வழிமுறைகள் வேறு மதக்கருத்துக்குரிய என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இலங்கையின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தவறான முறையிலான திட்டமிடல் மற்றும் மாணவர்களை வாசிக்கும் ஆற்றல் கிரகிக்கும் திறன்களில் கவனம் செலுத்துவது குறைவாக உள்ளது. இதனால் மொழியாற்றல் குறைவாக உள்ளது.

கடந்த (30) முப்பது ஆண்டுகளுக்குப் பின்னரான யுத்த வடுக்களின் தாக்கமும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட கொரோனா யுத்த அலையின் பாதிப்பும் நூலகங்கள் முழுமையாக செயற்பட முடிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் வாசகர்களின் வாசிப்பு ஆற்றல் பின்னடைவாக இருந்ததை காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தேசிய நூலக ஆனவமாக்கல் சேவைகள் சபையினால் (NLDSB) தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள பொது நூலகங்களுக்கும் பாடசாலை நூலகங்களுக்கும் பிரகடனப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையும்,மட்டக்களப்பு பொது நூலகமும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்துக்கான நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றன. "அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விழிப்புணர்வுகளை நடாத்தி வருகிறது. இச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக கட்டுரைப்போட்டிகள், கவிதைப்போட்டிகள், வினாவிடைப்போட்டிகள், சித்திரப்போட்டிகள் மற்றும் கிராமத்திற்கு ஒரு நூலகம் எனும் வீதி நாடகமும் நடாத்தப்பட்டு வருகிறது. விசேடமாக சிரமதானம் மற்றும் மரம் நடும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தேசிய வாசிப்பு மாதம் சிறப்பாக இடம்பெற வாழ்த்துவதுடன் வாசிப்பு மாதத்தை நினைவு கூறுவோமாக.

**தொகுப்பு**

**திரு. சீனித்தம்பி தரணீஸ்வராநந்தா**
**ஓய்வு நிலை அதிபர் – JP**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு பற்றிய தகவல்கள்......

- மட்டக்களப்பு கோட்டை 1628ம் ஆண்டு போர்த்துக் கேயரால் கட்டுவிக்கப்பட்டது.
- கல்லடி பாலம் நிர்மாண வேலைகள் 1924ல் ஆரம்பிக்கப்பட்டது. (900 அடி நீளம்)
    - கல்லடி பாலம் 4.5 லட்சம் ரூபா செலவில் கட்டி 1929ல் திறந்து வைக்கப்பட்டது.
- மெதடிஸ்த மத்திய கல்லூரி 1814ல் தொடங்கி வைக்கப்பட்டது.
- வின்சன்ட் மகளீர் கல்லூரி 1820ல் கட்டப்பட்டது.
- புனித மிக்கேல் கல்லூரி 1879ல் கட்டப்பட்டது.
- அமிர்தகழியில் உள்ள கப்பலேந்தி மாதா கோயில் 1822ல் அமைக்கப்பட்டது.
- பொது நூலகம் 1855ல் ஸ்தாபிக்கப்பட்டது.
- கிழக்கு மாகாணத்தின் தலைநகராக 1870ல் புளியந்தீவு அமைக்கப்பட்டது.
- கல்லடிக்கும் கச்சேரிக்கும் இடையில் 1891ல் Sham Rock எனும் நீராவி படகின் மூலம் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.
- சுவாமி விபுலானந்தர் 1924ல் ஞான உபதேசம் பெற்றார்.
- சிவானந்தா வித்தியாலயம் 1925.11.26 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. (சுவாமி விபுலானந்தர் அடிக்கல் நாட்டினார்)
- கோட்டைமுனை பாலம் 1930 ல் கட்டப்பட்டது.
- வெளிச்ச வீடு 1932ல் கட்டப்பட்டது.
- மாநகர சபை முதலாவது தேர்தல் 1967ல் நடாத்தப்பட்டது.
- மட்டக்களப்பு வாவி 30மைல் நீளமானது.
- புகையிரத சேவை 1928ல் ஆரம்பிக்கப்பட்டது.
- மட்டக்களப்பு குடியிருப்புக்களை அடித்துச் சென்ற பாரிய வெள்ளப் பெருக்கு 1878ல் ஏற்பட்டது.
- தாண்டவன் வெளி காணிக்கை மாதா தேவாலயம் 1624ல் கட்டப்பட்டது.
- மெதடிஸ்த தேவாலயம் 1838ம் ஆண்டு கட்டப்பட்டது.
- இராமகிருஷ்ன மிஷன் அடிக்கல் 1912ல் நாட்டப்பட்டது.
- புதிய கல்லடிப்பாலம் 01.03.2008ல் அடிக்கல் நாட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- Freeman Tanner Pandal 1907 – 1909 காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டு 22.06.1911ல் திறந்து வைக்கப்பட்டது.
- மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலை 1915ல் அமைக்கப்பட்டது.
- அமிர்தகழி மாமாங்கஸ்வரம் கர்ணபரம்பரை கதை ஊடாக ராமர் காலத்தில் தோன்றியலிங்கத்தை 1875ல் நல்ல முறையில் அமைக்கப்பட்டு நிர்வகித்துவருகின்றார்கள்.
- கல்லடி வேலாயுத சுவாமி கோயில் 1911ல் அமைக்கப்பட்டது.
- நாவலடி கடலாட்சி அம்மன் கோயில் 1940ல் ஆரம்பிக்கப்பட்டது.
- சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு மண்ணை தொட்டநாள் 29.03.1892ல

**திருமதி.சிவானி இரத்தினகுமார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புகைத்தலைத் தவிர்ப்போம்

மனிதன் இன்று விஞ்ஞான தொழில் நுட்ப ரீதியிலும் ஆன்மீகத்திலும் உன்னத நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றான். இதனால் உலகம் சுபீட்சங்களைக் கண்டுள்ளது. இந் நிலையில் இவற்றைத் தவிடு பொடியாக்கி ஒன்றுமே இல்லாத சூனிய நிலைக்கு இட்டுச் செல்கின்றது. போதை வஸ்து எனும் அரக்கன் இவற்றின் மோகம் மனிதனைப் பேயாக அலைக்கிறது. பல வழிகளில் இப் போதைவஸ்து மனிதனை ஆட்கொள்கின்றது. இவ்வாறு அடிமைப்படுத்தும் பழக்கங்களில் முதலிடம் வகிப்பது புகைத்தல் ஆகும்.

புகைத்தலால் பாவனையாளருக்கு மட்டுமன்றி அயலில் இருப்பவரும் பாதிக்கப்படுகின்றார். அதாவது குடும்பத்தில் தந்தை புகைப்பதால் அங்கு வளரும் குழந்தை பாதிப்பிற்குட்படுகிறது. பாதிப்பு பாதிப்பு என்கின்றோம். என்ன வென்று ஆராய்ந்தால் உயிர் கொல்லும் நோய்களான,T.B, நுரையீரல் புற்று நோய் என்பன பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நீங்கள் தொலைக்காட்சி விளம்பரங்களில் கண்டிருப்பீர்கள். என்றுநினைக்கின்றேன். இவ்வாறு எமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் புகைத்தலை முற்றாக ஒழிக்க வேண்டும். மக்களிடையே துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, கருத்தரங்குகள் போன்றவற்றால் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுபீட்சமான உலகிற்கு இட்டுச் செல்ல வேண்டும்.



**Batticaloa என்று பெயர் பெற்ற விதம்ஒல்லாந்தர் மொழியில் Batti என்றால் "நெல்" என்று பொருள். நெற்கள் அதிகமாக கிடைத்ததால் நெற்குவியல் என்பதற்கு பொருளாக Batticaloa என பெயரிடப்பட்டது.**

**தகவல்:திரு.க.பரராஜசிங்கம்**
**(இளைப்பாறிய அதிபர்)**

**தெரிந்து கொள்ளுங்கள்**

- **உலகில் மிகப்பெரிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?**
  - கிரேக்கம் 158 வசனங்களைக் கொண்டது
- **விமானத்தின் கறுப்புப் பெட்டியின் நிறம் என்ன?**
  - செம்மஞ்சள் நிறம் -
- **கணனி நகரம் என்றழைக்கப்படும் நகரம் எது?**
  - சென்பிரான்சிஸ்கோ
- **உலகில் எந்த நாட்டு மக்கள் கைத்தொலைபேசியை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.?**
  - சீன நாட்டு மக்கள்
- **மனித உடலின் மிகப் பெரிய உறுப்பு தோலாகும். இரண்டாவது பெரிய உறுப்பு எது?**
  - ஈரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பு திறன்

"கல்விகரையிலகற்பவர்நாள்சில
மெல்லநினைக்கற்பிணிபல"

என்கின்றது நாலடியார். சிலவாழ்நாட் பிணிச்சிற்றறிவுடைய மாந்தர் கல்வியை முற்றாக கற்க முடியாது என்பதே நாலடியாரின் வாக்கு. எனினும் பரந்துபட்ட அக்கல்வியில் அணுவள வேனும் கற்று சிந்தை விருத்தியுடைய அறிவுச்செல்வத்தை சிரத்தையோடு தேடும் போதே மனிதவாழ்வு செழிப்படையும். மனிதன் மனிதனா கிறான். இதனையே இரண்டடியில் இனிதே தருகிறார் வள்ளுவப் பெருந்தகை,

"விலங்கொடுமக்களனையர்இலங்குநூல்
கற்றாரோடுஏனையவர்"

என ஓர் உவமை மூலம் உணர்த்துகிறார். வாழும் பொருளாம் கல்வியறி வுடையோரே மனிதர் என்றும் கல்வியறிவு அற்றோர் விலங்குகள் என கூறுகிறார்.

மனிதனை மனிதனாக மாற்றும் சிறப்புடைய கல்வியை பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய வழிகள் உள்ள போதும் அவற்றுள் சிறந்து விளங்குவது நூல்களே ஆகும். அந்நூல்களும் பொருளுணர்ந்து வாசிக்கும் பழக்கத்தாலே பயன் கொள்ளப்படுகின்றது. எனவே வாசிக்கும் பழக்கம் கல்வியின் ஆணிவேராக அடித்தளமாக காணப் படுகின்றது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது உளவியல்சார்ந்த ஒரு முதுமொழி. மனவிசாரங்களும், மனவிகாரங்களும் அற்ற இளமைப்பருவத்தில் கற்கும் கல்வி சிந்தாது, சிதறாது, சிதையாது. மனதிலே பசுமரத்தாணி போல் பதியும். எனவே தான் கல்விக்கு அடித்தளமாய் அமையும். வாசிப்பு பழக்கம் இளமையிலே அரும்பி வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் வேண்டும். அதனாலேயேபுதியகல்விக்கொள்கையில்வாசிப்புக்குஅதிமுக்கியத்துவம்கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும், முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகின்றது. நூல்களை பிழையின்றி வாசித்தல், கருத்தை விளங்கிக்கொள்ளல், விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய முத்திறனும் மொழித்தேர்ச்சியில் அடங்குவன. மாணவர் சிலர் பிழையறவாசிப்பர். ஆனால் கருத்தை விளங்கிக் கொள்ளமாட்டர்கள். சிலர் வாசித்து விளங்கிக் கொள்வர். ஆனால் விளங்கியதை வெளிப்படுத்தமாட்டர். அவர்கள் கனவுகண்ட ஊமைகள் போன்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே வாசித்தவற்றை விளங்கிக் கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும்.

முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவனின் பேச்சில் தெளிவும், கருத்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல் எந்தக் கருத்தையும் தெளிவாகப் பிறர் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பான்.
அவனது எழுத்து நடை எளிமையும், இனிமையும், தெளிவும், கருத்தாழமும், வழுவின்மையும் கொண்டதாக அமையும்.

வாசிப்பு பழக்கம் பெற்றமாணவன் ஒருவனுடைய கட்டுரைகள் அவ்வாறற்ற மாணவன் ஒருவனின் கட்டுரையுடன் ஒப்பிட்டு நோக்கின் உண்மைபுலனாகும். அன்றியும் செம்மையான வாசிப்புதிறன் பெறாத மாணவன் பள்ளியிற்பயிலும் பாடங்களின் சிறப்புநிலை அடைய முடியாதவாறு திண்டாடுகின்றான். குருடன் போல தடுமாறி பருவமடைகின்றான். குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் போன்றபாடங்களை கற்கும் மாணவன் விவேகியாக இருக்காவிடின் அவனுடைய சீரற்ற வாசிப்பு திறன்காரணமாக அவன் அப்பாட நூல்களையோ, அவை சம்மந்தமான வினாக்களை விரைந்து விளங்குமாற்றல் இல்லாது திண்டா டுகின்றான். தனது பூரண ஆற்றலை வெளிப்படுத்த முடியாதவனாகின்றான். அவன் வேகத்தின் முழுப்பயனை அடைய முடியாதவனாகின்றான். காட்டில் எரியும் நிலவைப் போல விவேகம் குறைந்த வனாயினும் வினாக்களை வாசித்து விளங்கித் தெளிவுறுபவன் விடைகளை யெழுதி சிறப்புசித்தி பெறுகின்றான். எனவே கல்லூரியில் பாடங்களில் மாணவர்கள் திறமை காட்டவாசிப்புதிறன் இன்றியமை யாததாகும் பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவர்களின் கல்வி முற்றுப்

பெறுவதில்லை. கரையற்ற கல்விக் கடலிலுள்ள சின்னஞ் சிறுதுளியே அவன் கற்கும் கல்வி. அக்கல்வியில் ஒரு மாணவனது அறிவு பெருகி விடும் எனஎண்ணுவது பகற்கனவு. எனவே மாணவன் பாடநூல்களை கற்பதோடு பிறபல நூல்களை வாசித்தல் வேண்டும். “கண்டது கற்றபண்டிதனாவான்” என்பது பழமொழி. நல்லனவென கண்டவற்றை கற்க வேண்டுமென அப்பழ மொழி கூறுகின்றது.

வாசிப்பு திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசிகொண்டதாக இருக்கும். எத்தனை நூல்களை வாசித்தாலும் அவனது பசி அடங்காது. மணிமேகலை எனும் காப்பியத்தில், “யானைப்பசி எனும் நோய் கொண்ட காயசண்டிகை என்பவள் எவ்வளவு உணவு, எந்நேரம் கொடுத்தாலும் அடங்காதபசி கொண்டவள்” என குறிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு மாணவனும் காய சண்டிகையின் உணவுப்பசி போல வாசிப்பில் பசிகொண்டிராவிட்டால் அவனது உயர்வுக்கு வித்திடப்படுமோ? தானாகவே கிணற்றுத் தவளை நிலைக்கு சென்று விடுவான். ஆழமற்ற அறிவுடைய வனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாறாக மாணவன் வாசிப்பில் கவனம் செலுத்து வானாகில், அறிவால் மட்டுமல்ல உள்ளத்தாலும் உயர்ந்தவனாகின்றான்.

வாழ்வினையும் வாழ்வின் விழுமியங் களையும் புலப்படுத்தும் இலக்கியம், கட்டுரை, கவிதை முதலியவற்றை வாழ்வினையும் வாழ்வின் விழுமியங் களையும் புலப்படுத்தும் இலக்கியம், கட்டுரை, கவிதை முதலியவற்றை படிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதியபுதிய கதைகளை உருவாக்குகின்றான், குணாதிசயங்களை உணர்கின்றான், பல கோணங்களில் வாழ்வை காண்கின்றான். பற்பல புதிய விடயங்களை பெறுகின்றான். நல்லவை எவை? தீயவை எவை? என பாகுபடுத்தக் கூடியவனாகின்றான்.

இதனால் அவன் உள்ளம்விரிவடைகின்றது. எதிர்கால வாழ்விற்கு தம்மை தயார்செய்யும் உன்னத நிலை உருவாகின்றது. மாணவர்களே சிற்பிகள், ஒரு நாட்டின் தூண்கள், நாளைய விடியல்கள், எதிர்கால குடிமக்களும் அவர்களே தான்.

அவர்கள் அறிவுச் செல்வத்தால் உள்ளத்தில் உயர்ந்து உருவாக வேண்டு மேயானால், அவர்கள் வாசிப்புத் திறனை விருத்தி செய்யவேண்டும். வாசிப்புதிறன் கைவரப் பெற்ற மாணவன் கல்விக்கரையை கடந்தவனாகின்றான். கல்வியெனும் நீள்வளியில் அரைபங்கு கடந்து விடுகின்றான். அன்றியும் முழுமையான மனிதவளர்ச்சிக்கு தன்னைத் தானே ஆயத்தமாக்கியவனாகின்றான்.

ஆகவே மாணவர்களாகிய நாம் நிகழ்கால விதைகள், எதிர்கால விருட்சங்கள் என்பதை உணர்ந்து வாசிப்புதிறனை வளர்த்து வாழ்க்கை எனும் நீண்டபயணத்தினை இலகுவில் கடப்போமாக.

**தெரிந்து கொள்ளுங்கள்**

உலகில் மிகப் பெரிய நூலகம் எங்கு அமைந்துள்ளது?
[illegible]கிய அமெரிக்காவில் அமைந்துள்ள கொங்கிரஸ் நூல்கள்

உலகிலுள்ள மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் எது?
[illegible]கோஸ்லேவியாவிலுள்ள ஸ்ட்ராஹோவ் (Great Strohou [illegible]adium) என்று அழைக்கப்படும் அரங்கம்

உலகின் முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி, எசெக்ஸ் மற்றும் மிடில்செக்ஸ் என்னும் இரு அணிகளுக்கு இடையே 'லார்ட்ஸ்' மைதானத்தில் நடந்தது. ஆண்டு 1787



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குழந்தை வளர்ப்பு

# குழந்தைகளுக்கு உற்சாக டானிக்கை கொடுத்துக்கிட்டே இருங்க!

*'உன்நண்பன்யாரென்றுசொல்.நீயாரென்றுசொல்கிறேன்' என்றுசொல்வார்கள். அதனால்உங்கள்குழந்தைகள்எப்படிப்பட்டநண்பர்களுடன்பழகுகிறார்கள்என்பதைகவனித்துக்கொள்ளுங்கள்.*

*அவர்கள்போக்குதவறாகஇருந்தால்அவர்களுக்குப்புரியும்வகையில்பக்குவமானமுறையில்எடுத்துச்சொல்லுங்கள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- முக்கியமாக, தம் பிள்ளைகளை மற்றவர்கள் முன்னிலையில் குறை சொல்வதைத் தவிர்க்க வேண்டும். நமது குழந்தைகளை மேதைகளாக ஆக்க முடியாவிட்டாலும், குடிபோதை, போதை மருந்து, புகை, சிகரெட் போன்ற கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமை ஆகி விடாதவாறு பெற்றோர் கவனமாக குழந்தைகளை வளர்க்க வேண்டும்
- பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகள் பெற்றோர்களிடம் வெளிப்படையாக பேசுவதே இல்லை. பெற்றோர்களும் அவர்களிடம் எதையும் கேட்பதே இல்லை. இதனால்தான் அவர்களுக்குள் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகின்றன. இந்தவயதில் உள்ளவர்களை பெற்றோர்கள் தங்கள் நண்பர்களாக பாவித்து வளர்க்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குள் ஒரு சுமூக உறவு ஏற்படும்.
- 'மீன்கொடுப்பதைவிட, மீன்பிடிக்கக்கற்றுக் கொடுக்க வேண்டும்' என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு அது போல் எந்த ஒரு விஷயத்தினையும் அடிப்படையிலிருந்து தெளிவாக கற்றுக்கொடுங்கள். அவர்களுக்கு எந்ததுறையில் அதிக ஆர்வம் உள்ளதோ, அந்த துறையில்அவர்கள் திறன் வளர ஊக்கப்படுத்துங்கள். படிப்பிலும்சரி, விளையாட்டுக்களிலும்சரி உங்கள் குழந்தைகளுக்கு அவ்வப்போது 'உற்சாகடானிக்'கை கொடுத்துக் கொண்டே இருங்கள்.
- தாய் என்பவள் அன்பு காட்டுபவராகமட்டும் இல்லாமல், அறிவூட்டுபவராகவும் இருக்க வேண்டும். டி.வி. பார்ப்பது, தோழிகளுடன் அரட்டை போன்ற பொழுது போக்குகளை கொஞ்சம் உங்கள் குழந்தைகளுக்காக தியாகம் பண்ணுங்கள். தாய்மையின் பெருமையை உணருங்கள்.
- இயற்கை ஆணைவிட பெண்ணுக்கே அதிக பொறுப்பை கொடுத்திருக்கிறது. குடும்பத்தை பராமரிப்பது தான் அந்த பொறுப்பு. அதனால் தான்மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அன்னைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'சொர்க்கம்' எங்கே இருக்கிறது என்று தேடுபவனிடம் 'உன்னைப்பெற்றதாயின் காலடியில்' என்று சொல்கிறது ஒரு பழமொழி. அதிக தவறுகளைத் தெரிந்தும், தெரியாமலும் செய்துவிட்டு, அதற்கான பாவங்களை கழுவகோவில், குளம் என்று செல்வதில் பயன்ஒன்றுமில்லை. ஒவ்வொருவரும் அவரவர் மனசாட்சிப்படி நேர்மையாக நடந்து கொண்டால் போதும்.

- **அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது. அன்பின் முதல்பாடம் அதை அனைவருக்கும் செய்வது.**

**~ரஸ்கின்**

- **மன்னித்தல் தண்டித்தலை விட சிறந்தது. ஏனெனில் தண்டித்தல் மிருகத்தனம்: மன்னித்தல் மனித குணம்**

**~நெப்போலியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசிப்பை ஊக்குவிப்போம்

புத்தகத்தை புரட்டுங்கள்
புது உலகம் காண்பீர்கள்
புதுமைகள் படைப்பதற்கு
புகழ் நண்பன் புத்தகமே!

கண்களுக்கு விருந்தூண்டு
நாவுக்கு நற்சுவை யூட்டி
அறிவுக்கு உரம் ஊட்டி
ஆற்றலுக்கு பலம் கொடுக்கும் புத்தகமே!

வாசிப்பு வண்ணங்களில்
வழுவற்ற சொல் நடைகள்
பிறரது பழிப்பேச்சில்
பலிக்காத பலன்தரும் புத்தகமே!

உலகை மறந் து
உணர்வுகளில் திளைத்து
மனதை நிறைத்து
துயரம்குறைத்து வாழ ஒரு உலகுக்கும்
வழி செய்யும் விந்தை வாசிப்பு நீயே என
நிதானமாக வாசிப்போம்
நிலைவாழ்வை சுவாசிப்போம்
இலக்கியத்தை வாசிப்போம்
இன் சுவை தமிழை நேசிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொது அறிவை வாசிப்போம்
பொற்காலத்தை யோசிப்போம்
வித்தகர்கள் விதையாய் விதைத்திட்ட
விருந்தோம்பல் எமக்கு புத்தகமே!

சலிப்பில்லாமல் உடல்சாகும் வரை
தவிப்பில்லாமல் மனம் தாவும் வரை
கழிப்பில்லாமல் உடல் நோகும் வரை
வழியில்லாமல் வானம் தெரியும் வரை




ர.வித்யாஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவு நனவானது

அதிகாலை தனது விடுதியறையின் ஜன்னல் அருகே அமர்ந்து கொண்டு ஏதோ ஒரு விடயத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள் விசித்ரா. "ஏன் இந்தப் பலத்த யோசனை?" எனும் கேள்வி அவளது யோசனையைக் குழப்பிற்று. திடிரெனத் திரும்பிப் பார்த்தாள் விசித்ரா. அவளது விடுதியறைக் கதவோரம் நின்று கொண்டிருந்தாள் லஜஹரி. விசித்ரா அவளைக் கண்டதும் அவளது மனப் போராட்டமும், படபடப்பும் அதிகமாயிற்று. "என்னடி இவ்வளவு நேரத்தோட எனது, விடுதிக்கு வந்திருக்க?" என்று சிறுபிள்ளை போல் கேட்டாள் விசித்ரா. "என்னடியாச்சு உனக்கு. நீதானடி கோல் பண்ணி கோயிலுக்குப் போகலாம். வா என்று சொன்ன நீ மறந்து விட்டியாடி?" கேள்விக் கணைகளைத் தொடுத்தாள் லஜஹரி. "மன்னிச்சிடு லஜா, ஏதோ ஒருபதட்டத்துல மறந்துட்டன்.""இந்த நாலு வருசம் கஷ்டப்பட்டு படிச்சதிட பலன் இன்னைக்குத்தானே தெரியும். அது தான் ஒரே படபடப்பா இருக்கு. அம்மாட கனவு என்னை ஒரு இதய சிகிச்சை மருத்துவராக்குரது. அது நிறைவேறுமா? இல்லையா எண்டு கவலையா இருக்கு!" என்றாள் விசித்ரா.

யார் இந்த விசித்ரா? அவளது குடும்பப் பின்னணி என்ன? விசித்ராவின் தாய் யார்? விசித்ரா பெயரே ஒரு வித்தியாசமாகத்தான் இருக்கிறது. பாரதி கண்ட புதுமைப்பெண்! கல்வியில் சிறந்த மாணிக்கம். ஆம் இப்படிக் கூறிக் கொண்டே போகலாம். தமது சிறு வயதிலேயே தந்தையை இழந்த விசித்ரா தனது தாயின் அரவணைப்பைப் பெற்று வளர்ந்தாள். தனது பள்ளிப் படிப்பைச் சிறந்த முறையில் முடித்து பேராதனைப் பல்கலைகழகத்திற்கு விஞ்ஞான பிரிவின் மூலம் தெரிவானாள் அவள் அங்கு ஒரு மருந்தகத்தில் பகுதி நேர விற்பனையாள் ஆகித் தனது தாயின் சுமையை குறைத்து தனது கல்வியையும் முன்னேற்றினாள். தமது தாயாரின் இலட்சியத்தை நிறை வேற்றத் திடசங்கற்பம

பூண்டு விடா முயற்சியுடன் தனது கல்வியை மேற் கொண்டாள். அவ்வாறு முயற்சி செய்து தனது இறுதிப் பரீட்சைக்குத் தோற்றினாள்.

ஆம் இன்று தான் அவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகவுள்ளது. அவளில் காணப்படும் பதற்றத்திற்கும் இதுவே காரணம். விசித்ராவும், லஜாஹரியும் முதலில் கோவிலுக்குச் சென்று பூஜை புனஸ்காரங்களை முடித்துக் கொண்டு தியானத்தில் ஈடுபட்டனர். பின்பு தமது பல்கலைகழகத்தை அடைந்தனர்.

விரிவுரை மண்டபத்திலுள் இருந்த சகல மாணவ மாணவியர்களிடமும் பதற்றம் குடிகொண்டிருந்தது. விரிவுரை மண்டபம் வழமையான மகிழ்ச்சியை இழந்திருந்தது. அப்போது அவர்களது பேராசிரியர் பெறுபேற்றுப் பட்டியலுடன் அங்கு வந்தார். ஒரு சில வார்த்தைகளைப் பகிர்ந்து விட்டு பெயர்ப்பட்டியலையும் பெறுபெறுகளையும் இறுதியிலிருந்து வாசித்தார்.

இறுதியாக அவர் நாவில் இருந்து உதிர்ந்த பெயர் விசித்ரா. எல்லோரது கண்களும் விசித்ராவை நோக்கின. அவளது கண்களில் கண்ணீர் மழை போல் பொழிந்தது. அவளது தாயாரின் கனவு இறுதியில் நனவானது.

கி.பிரதாப்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசித்திடு நாளும்

சிகரத்தில் நீ நிற்க
சிந்தனைத் திறனை வளர்க்க
சிறப்புடன் இருக்க
சிரிப்புடன் வாழ
வாசித்திடு நாளும்

கண்ணுக்குள் மணியாக
அறிவுக்குள் வாசிப்பாக
வாசிப்பை வைரமாக்கி – அதில்
அறிவைப் பரிசாக்கி
வாசித்திடு நாளும்

வாழ்க்கையை உருவாக்கிட
வனத்தை வசந்தமாக்கிட
வானத்தில் பறந்திட
வானரமாய்த் திரியாமல்
வாசித்திடு நாளும்

தினமொரு பந்தி
திண்ணமாய் வாசித்து – மண்
திண்ணையிலிருந்து
தினமும் யோசி
வாசித்திடு நாளும

மனிதன் பூரணமாக
மனது உறுதியாக
முளை வெளித்திட
நாளை நீ அறிந்திட
வாசித்திடு நாளும்

வாசித்தால் பயனுண்டு – சொல்ல
வார்த்தைகள் அதற்கில்லை
ஐயமின்றி நல்லதை வாசி
ஐக்கியமாக நாளும் யோசி

ஐப்பசி மாதமதில்
ஐயமின்றி வாசிக்க
நூலகம் நாடிவிடு
நூல்கள் பல கற்றுவிடு

கெட்டதை நீ வாசித்தால்
கெட்டே நீ போவாய்
நல்லதை வாசித்திட்டால்
நலமாய் நீ வாழ்வாய்.

திருமதி.தயாளினி கிருஸ்ணராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தளர்ந்த மனதுக்கு தங்க பாய்ப்பம்

01. ஒவ்வொரு மனிதனிடமும் தனவனமக் குணம் உண்டு அர்த்தமற்ற பயமும், தாழ்வு மனப்பான்மையும்தான் பலரை அடிமைகளாய் வைத்திருக்கிறது.
02. ஒரு வேலையை ஆரம்பிக்ககும் போதே எப்போது முடிக்க வேண்டும் என்பதையும் தீர்மானி.
03. உன்னைப் பற்றிய அக்கறை உனக்கே இல்லை என்றால் நீ எப்படி உயர்வாய்.
04. சின்ன சின்ன சுகங்களில் சிந்தனை சென்றால் சிறந்த லட்சியங்கள் எப்படி உருவாகும்.
05. பத்தில் ஒருவனாய் இருப்பதை விட பத்தில் முதல்வனாய் இரு.
06. பணத்தைச் சேர்க்கு முன் பலத்தைப் பெருக்கு முன் படாடோபத்தை விரும்புவது பாதுகாப்பானது அல்ல.
07. இருக்கும் பணம் எவ்வளவாயினும் ஊறும் பணமும் உனக்கு வேண்டும்
08. முடியாது என்று நீ சொல்வதை எல்லாம் யரோ ஒருவன், எங்கோ ஒருவன் செய்து கொண்டிருக்கிறான்.
09. ஏழையாய்ப் பிறப்பது தவறு அல்ல ஏழையாகவே இருப்பதுதான் தவறு.
10. விமானத்தை ஓட்டும் திறமை உன்னிடம் இருக்கும் போது சைகக்கிள் ஓட்டியா நீ சம்பாதிப்பது.
11. நீ முயலாக இருந்தும் எத்தனை ஆமைகளிடம் தோற்றுக் கொண்டிருக்கிறாய் என்று எண்ணிப்பார்.
12. அறிவில் தெளிவு மனதில் உறுதி செயலில் தீவிரம் அடைவது வெற்றி.
13. எங்கு போவது என்பதையே இன்னும் முடிவு செய்யாதவன் இருக்கும் இடத்திலேதான் என்றும் இருப்பான்.
14. திறமையைக் காசாக்கும் திறமையே பெரும் திறமை.
15. முடியும் என்று நம்பித் தொடங்கு, செய்யச் செய்ய மனம் உறுதிப்படும். தளர்வு தள்ளிப் போகும், வேகம் கட்டும் வெற்றி தெரியும்.
16. எத்தனை முறை விழுந்தாலும் அத்தனை முறையும் எழுந்து நடப்பவனே ஊர் போய்ச் சேர்கிறான்.
17. பேசிக் கொண்டிருப்பதில் பெருமை இல்லை செய்து முடிப்பதே சிறப்பு.
18. இருட்டை குறை கூறிக்கொண்டு உட்கார்ந்திருப்பதால் என்ன பயன்? விளக்கு ஒன்றை ஏற்றுவதல்லவா விவேகம்.
19. ஓடும் ஒவ்வொரு நாளும் உன் குறிக்கோளை நோக்கி ஓர் அங்குலமாவது நகர்ந்திருக்க வேண்டாமா?
20. நமது முன்னோர்கள் மரம் நட்டார்கள் நாம் அனுபவிக்கின்றோம் நாம் யாருக்குமே முன்னோர்கள் இல்லையா? நாம் எதையாவது சாதிக்க வேண்டாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரம்பரிய சமையல் குறிப்பு



## தேவையான பொருட்கள்

01. குமுட்டி இலை - 1 கட்டு
02. நத்தை சூரி இலை - 1 கட்டு
03. இலை சொவி இலை - 1 கட்டு
04. பச்சை மிளகாய் - 7
05. பெரிய வெங்காயம் - 1
06. அளவான மாங்காய் - 1
07. சிறிதளவு உப்பு
08. மஞ்சள் சிறிதளவு
09. தேங்காயப் பூ - 1 ½ கப்

## செய்முறை

முதலில் இலை வகையை கழுவி சுத்தம் செய்க. பின் அதை சிறிதாக அரிந்து எடுக்கவும் பின் ஒரு கப் தேங்காய்ப் பூவைப் பிழிந்து முதலாம் பால், இரண்டாம் பால் என்று வேற வேறாக வைக்கவும். ½ கப் தேங்காய்ப் பூவை அரைத்து வேறாக வைக்கவும் பின்பு ஒரு மண்சட்டியில் இலை வகை, பச்ச மிளகாய் அதனுடன் மாங்காயைத் தோல் சீவி அரிந்து இலைகளுடன் சேர்க்கவும். அதனுடன் உப்பு, மஞ்சள் தூள் போடவும் பின்பு இரண்டாம் பால் சேர்த்துக் கொதிக்க விடவும் கொதித்தவுடன் தேங்காய் அரைத்ததைப் போடவும். அது ஒரு கொதி வந்தவுடன் இறக்கிச் சோற்றுடன் சாப்பிட நன்றாக இருக்கும் (அசைவம் சாப்பிடுபவர்கள் சிறு துண்டு மீனை அதனுடன் சேர்த்துச் சமைத்தால் இன்னும் நன்றாக இருக்கும்.)

**திருமதி.நேசராணிஹரிதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எங்கள் நூலகம்

மட்டு நகர் எங்கள் தாயகமாம்
எத் திசையும் புகழ் பரப்பும் தேனகமாம்
மட்டு நகர் வாவியிலே
மீனினம் பாடிடுமாம்

வாவியின் அருகினிலே
அறிவொளி வீசும்
எங்கள் பொது நூலகமாம்

ஏழை பணக்காரன் பேதமின்றி
ஏற்றதாழ்வு பார்ப்பதில்லை எங்கள் நூலகம்

தெளிவான அறிவாற்றல் உள்ளோரை
தன்னகத்தே இழுப்பதே எங்கள் நூலகம்
முடிவில்லா கல்வியின் முறைசார் தோட்டம்

கடல் என உள்ளதாம் கல்வி
கற்றதே கை பிடி என்றாள் ஔவை.

ஆக்கம்: திருமதி: வளர்மதி தேவராஜா

**அமைதியான
அடிமைத்
தனத்தை விட,
ஆபத்தான
சுதந்திரமே
மேலானது.**

**- ருசோ -**

**அமைதியின்
மூலமே
முட்டாள்களை
புரிந்து
கொள்ளலாம்.**

**- போய்லியு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமாதானம்






எங்கே எனத் தேடிப் பார்க்கின்றேன்.

சமாதானம் அங்கேயும் இல்லை.

இறைவன் மனிதனாக எம்மைப் படைத்தது

சமாதானமாக இருக்க என தெரியாதா?

சமாதானம் என்ற வார்த்தைக்கேஅர்த்தமாய்

வாழ்ந்தது நம் நாடுதானே.

நாமே இன்று சமாதானமின்றி வாழ்வது
நியாயமா?

நாம் சமாதானத்தைக் கேட்பது

உங்கள் காதுகளில் கேட்கவில்லையா?

சமாதானத்தை நாம் தானே உருவாக்க
வேண்டும்

சமாதானமே நம் நாட்டின் பலம்

நாமே சமாதானத்தை அழித்து

நம் நாட்டை அழிக்கலாமா?

**சு.மோனிக்கா**

மத்திய தரைக்கடலின் 'சாவி' என
அழைக்கப்படுவது எது?

ஜிப்ரால்டர் நீரிணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்

### சிறுவர்களுக்கான படக்காட்சி















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பதாதைக் காட்சிப்படுத்தலும் நூலக சிரமதானமும்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் நூலக நிகழ்வு
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய மாணவர்களால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கொக்குவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் நூலக நிகழ்வு



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புளியடிமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற நடமாடும் நூலக நிகழ்வு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நாவலடி நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற நடமாடும் நூலக நிகழ்வு
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விபுலானந்தா கல்லூரியில் நடைபெற்ற நடமாடும் நூலக நிகழ்வு



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கட்டுரை, கவிதைப் போட்டி**











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சித்திரப் போட்டி








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற விவாதப் போட்டி**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வினாவிடைப் போட்டி













Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்வு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு காந்திப் பூங்காவில் நடைபெற்ற சிறுவர்களுக்கான கதை கூறும் நிகழ்வு















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நாடகமும் புத்தகக் கண்காட்சியும்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பினால் உயர்வடைந்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் மட்டக்களப்பு பொது நூலகத்தில் காட்சிப்படுத்திய போது**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 1ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்




செல்வி.ர.ரித்திகா ஷமி

மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்

தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 2ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்**




**செல்வி.கோ.டிலக்ஷி**

**மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம்**

**தரம் - 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 3ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்




செல்வி.சு.பவிஷ்னா

மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை

தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டிக்கழி பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 1ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்



செல்வி.R.லோஜினி

மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம்

தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டிக்கழி பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 2ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்




**Miss.R.Paviththira**

**மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம்**

**தரம் - 12**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டிக்கழி பொது நூலகத்தினால் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் 3ம் இடத்தினை பெற்றுக் கொண்ட சித்திரம்



Miss.A.Litheya

மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம்

தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**தேசிய வாசிப்பு மாதம் ~ ஒக்டோபர் 2022**
**விஷேட போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்**
**பொது நூலகம் ~ மட்டக்களப்பு**

| இல | போட்டி | மாணவர் பெயர் | பாடசாலை | இடம் | |
|---|---|---|---|---|---|
| 01 | நிறந்தீட்டல் (அரசடி) | நிஷாந்தன் அபிஷேக் ஜொக்ஸ்வன் | புனித மிக்கேல் கல்லூரி | 1st | |
| | | விக்னேஸ்வரன் அனிகாஷிகா | இந்துக் கல்லூரி | 2nd | |
| | | பிலேந்திரன் சரோனி | | 3rd | |
| | வாசிப்பு (அரசடி) | திவ்யராஜ் லிர்த்திகா | புனித திரேசா பெண்கள் பாடசாலை | 1st | |
| 02 | சித்திரம் (மட்டிக்கழி) | ஆர்.லோஜினி | | 1st | |
| | | பி.பவித்திரா | | 2nd | |
| | | ஏ.லத்தியா | | 3rd | |
| 05 | சித்திரம் (பாரதிலேன்) தரம் - 5,6 | A.Deshali | | 1st | |
| | | K.Daniya | | 2nd | |
| | | A.Yamiksha | | 3rd | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | பாலர் பிரிவு (பாரதிலேன்) | K.நகுல்ஹரி | | 1st | |
| 07 | பேச்சு | சண்முகப்பிரியன் கிஷோறி | கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் | 1st | |
| | | மரியதாஸ் கெனோஸித் | கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் | 2nd | |
| | | ரவிராஜ் வினுஸ்கா | அருணோதயா வித்தியாலயம் | 3rd | |
| 08 | கவிதை | பகிரதன் பவித்திரா | அமிர்தகழி ஸ்ரீ.சி.வி.ம.வித்தியாலயம் | 1st | |
| | | அன்ரன் பெலிண்டா | விபுலானந்தா கல்லூரி | 2nd | |
| | | R.அபிராமி | ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி | 3rd | |
| 09 | கட்டுரை | றா.டெனிஸா | புனித சிசிலியா பெண்கள் கல்லூரி | 1st | |
| | | அ.அபிசாயினி | புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயம் | 2nd | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சி.டிலக்ஷினி | ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலயம் | 3rd | |
| 10 | வினாவிடை | செ.ஜெரமி<br>ர.குகருக்ஷன்<br>உ.துவாரகேஷ்<br>கோ.ஸிகுஷ்ணா<br>ஜெ.ஹம்சாந்த் | மெதடிஸ்த மத்திய கல்லூரி | 1st | |
| | | பா.யதுஸ்ரிகா<br>வி.விதுசினி<br>அ.கிஷானிக்கா<br>சு.சதுசனா<br>பி.தஷாங்ஹரி | புனித சிசிலியா பெண்கள் கல்லூரி | 2nd | |
| | விவாதம் | மைக்கல் டீஸன்<br>ஜோர்ஜ்குமார் யோபு<br>ஏகலைவன் அட்சரன் | சிவானந்தா வித்தியாலயம் தேசிய பாடசாலை | 1st | |
| | | தவசீலன் தனுசிக்கா<br>பிரபாகரன் தஷாங்ஹரி<br>தர்ஷன் அஞ்சலிக்கா | புனித சிசிலியா பெண்கள் கல்லூரி | 2nd | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media